பதிவு பெற்ற மருத்துவர்களின்
உபயோகத்திற்கு மட்டும்

அரவிந்த்

மருந்துகளின் உபயோக குறிப்பு

ஹெர்பல் லேப்ஸ் (பி.) லிட்.,

517/4A, முடங்கியார் ரோடு, 4வது கிலோ மீட்டர்,
இராஜபாளையம் - 626 117. தென் இந்தியா.

☎ அலுவலகம் : 20115
வீடு : 21619
த.பெ. எண் : 140
ஃபேக்ஸ் : 04563 - 20115
பேஜர் : 04562 - 9652 - 212012

EMAIL:aravindh.1@vsnl.com

வரிசை எண்	பொருளடக்கம்	பக்கம்
1.	சித்த வைத்தியம் பற்றிய முன்னுரை	2-31
2.	பற்பொடி வகைகள், ஏரோபாம்	32
3.	மூலிகை கேப்சூல்ஸ்	32-37
4.	மூலிகை குளிக்கும் தூள்	38
5.	மூலிகை டானிக்குகள்	38-39
6.	காய கல்பம்	39
7.	வான் குமரி கல்பம்	39
8.	இயற்கை மூலிகை பானம்	39
9.	மூலிகை களிம்பு	40
10.	மூலிகை தைலங்கள்	40-46
11.	மூலிகை சூரணங்கள்	46-48
12.	இரசாயனம்	49
13.	இயற்கை மூலிகை லேகியங்கள்	50-53
14.	பற்பங்கள்	53-57
15.	செந்தூரங்கள்	57-60
16.	கருப்பு	61
17.	மூலிகை குளிகைகள்	61-63
18.	வெண்ணெய், மெழுகு, மணப்பாகு	64-67
19.	வெடியுப்பு, சுண்ணம், வசந்த குசுமகரம்	67
20.	நோய்களும், அதற்குண்டான மருந்துகளும்	68-72
21.	குழந்தைகளின் சராசரி எடை அளவு	73
22.	பால் பற்கள், நிலையான பற்கள்	73
23.	25 வயது ஆண், பெண் எடை பற்றிய குறிப்பு	74
24.	சராசரி இரத்த அழுத்தம், இரத்த அளவு	75-76
25.	பிரிட்டன், மற்றும தசாம்ச அளவு	77
26.	ஆண் விந்துக்களின் மதிப்பீடு	78
27.	பிரசவ நாள் கணக்கிடும் முறை	79
28.	ரோமானிய எண்குறி	80
29.	விலை பட்டியல்	81-84

1. சித்த வைத்தியம்

பொதுவாக சித்தர்கள் முறைப்படியுள்ள ஓர் வைத்திய நூல் இது ஓர் நூதனமான நூல், ஆகவே மற்ற மருத்துவ நூற்களோடு ஒப்பிட முடியாது. ஏனெனில் இவ்வைத்திய நூலில், வாதம், ஞானம், யோகம், மாந்திரீகம், சோதிடம் முதலிய நூற்களும் சேர்ந்துள்ளன. வாசிப்போர்கள் இந்நூலைத் திறந்து பார்க்கும்போது, மேற்கண்ட நூற்களெல்லாம் வைத்தியத்தோடு கலந்திருப்பதைக் காணலாம் ஆகையால் விசாலமான ஆதாரங்களைக் கொண்டது. இந்நூலின் உள் விஷயங்களை நோக்குமிடத்து இவைகளெல்லாம் மேனாட்டு ஆசியா, ஐரோப்பாவின் நாகரீகத்திற்கு நெடுங்காலத்திற்கு முன்னதாகவே ஏற்பட்டதென்று தெளிவாக விளங்கும்.

இதில் போகர், புலிப்பாணி, இராமதேவர் முதலியவர்களைத் தவிர பெரும் பாலும் சித்தர்களெல்லாம் தமிழர்களே யாதலால், இச்சித்தவைத்தியம் தமிழ் நாட்டுக்கே உரிய தென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. அதனுல்தான் அவர்கள் செய்த நூற்களெல்லாம் தமிழ் செய்யுளில் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், ஆயுள் வேதம் எப்படி ஆரியர்களின் தெய்வ அனுக்கிரகத்தை குறிக்கிறதோ, அதேமாதிரியே சித்த வைத்தியம், சிவன், பார்வதி இவர்கள் கடாட்சத்தால் ஆக்கப்பட்டதென தெளிவாகிறது. பூர்வீக நாகரீக சரித்திரத்தினுல் சித்த வைத்திய முறை அனேக சித்திகளை பெற்றதென்பதை ஒருவரும் மறுக்கவே முடியாது.

சித்தர் முறை :- அனேக ஆயிர வருடங்களுக்கு முன்னதாகவே ஏற்பட்டது. எல்லா தந்திரத் தொழில்களிலும், வித்தை நூற்களிலும் சித்தர்கள் மேற்கொண்ட முயற்சிகளும் அறிவின் திறமும் அபாரமானது. அவர்கள் வைத்திய முறையை கையாண்ட காலமோ தங்கத்தைப் போன்ற மிக்க சிறந்தகாலம். சித்த முறையை அனுசரித்த விஷயங்களைப் பற்றிய விசாலமான கேள்விகளுக்கு எளிதில் பதில் கூறிவிட முடியாது. சித்தர் முறையோ ஆன்ம சக்தி யடைந்த பிறகு விஷயங்களைத்தெளிவாக தெரிந்தபின் அவர்களால் எழுதப்பட்டது. சித்தர்களின் ஞான விளக்கத்தின் அறிவாலும், அனுபவத்தாலும் எழுதிய நூற்களில் உண்மையே அடிப்படையாக உள்ள காரணத்தினுல் ஒருவரும் அதை மறுத்துவிட முடியாது. மேலும், ஒரு மிக்க சிரத்தையோடு படித்து விஷயங்களை கிரகிக்கவேண்டு மென்று உண்மையாகவே முயற்சித்தா லொழிய, அனேக விஷயங்கள் நம் புலனுக்கு எட்டாது. ஓர் இரகசியமான வித்தையாகவே காணப்படும் ஆக்வே ஒருவரும் இம்முறையைப் பற்றி குறைகூற முடியாது. திராவிட நாகரீகம் மலிந்த இந்த தென் இந்திய நாடு, பூர்வத்தில் தமிழ் முதற்சங்கம் இருந்த தென்பாகம் முழுமையும் கடற்கொண்டுவிட்டது. சித்த வைத்தியத்திலும் மேற்கண்ட நாகரீகத்தைப் பெற்ற விஷயங்களும் சிலது உள்ளன. தமிழ் பாஷை எப்படி வடமொழியைத் தழுவாமல் தனிப்பட்ட முறையோ. அது மாதிரியே சித்த முறையும், ஆயுள் வேதத்தைச் சேராத தனிப்பட்டமுறை. இந்நூற்களெல்லாம் சித்தர்களால் தான் எழுதப்பட்டதென்பது அவர் செந்தமிழ் நடை செய்யுள்களினுலேயே இனிது விளங்கும் ஆகவே, சாதாரண எழுத்தாளர்களால் இவ்விதமாக எழுதிவிட முடியாது. அன்றியும், மற்ற நூற்களில் கண்டறியாத, எப்பொழுதுமே கேட்டிருத, அனேக இரகசியமான விஷயங்கள் இந் நூற்களிற் காணலாம். சிலமுக்கியமான விஷயங்கள், சித்த நூற்களை முற்றும்

செம்மையாகப் படித்தவர்கள்தான் சித்தர்கள் பரிபாஷையிற் சொல்லியுள்ள முக்கியமான விஷயங்களை அறியக்கூடும். உலகமே பொன்னுசையினுல் வெறிகொண்டது என்ற விஷயம் நன்ருய் தெரிந்ததே. ஆகையால் சித்தர்கள் தங்கள் வாத முறையில் அனேக விஷயங்களை வெகு தந்திரமாக கூறியுள்ளார். ஆன்ரோர் வாக்கின்படி, வாதி மகன் வைத்தியன் என்பதினுல் வைத்தியன் வாதியின் மகனு இருக்கவேண்டுமென்பது ஏற்படுகிறது. ஆகவே, இம்முறையில் ஈடுபட்ட வைத்தியன் தன் தொழில் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே வாதத்தில் தேர்ச்சியடைந்தவனுயிருக்கவேண்டும். இவ்வாதத்தொழில் பணம் சேர்ப்பதற்கல்ல, தனக்கு சீவனத்துக்கு எவ்வளவோ அவ்வளவுமட்டும்தான், மற்றும் தன் வைத்தியத் தொழிலுக்கு பிறர் உதவியின்றி எவ்வளவு வேண்டியதோ அதுமட்டும்தான் என உணரவேண்டும். நோயாளி இடமிருந்து பணம் எதிர்பார்க்கப்படாது. எல்லாருமே சித்தியடைந்த வைத்தியர்களாய் இருக்க முடியாது. சில கிரகங்களின் அம்ச காலங்களில் பிறந்திருந் திருந்தால்தான் முடியும் அவன் சாதகப் பிரகாரம் வைத்திய நூலிலும் வாதத்திலும் தேர்ச்சி யுள்ளவனு யிருக்க வேண்டும். சாதாரணமாக கற்கடக ராசியில் பிறந்தவன்தான், பிறவி வைத்தியன் என்று சொல்லப்படுவான். ஆகவே, தேர்ச்சியினுல் பெற்ற அறிவினுல் அவ்வளவு சித்தி பெற முடியாது நூற்களைக் கல்லாமல், சொற்ப அறிவினுல் செய்யும் வைத்தியம் மேற்சொன்னதைவிட அவ்வளவு சிலாக்கியமானதல்ல.

சித்த வைத்தியர்களின் குணதிசயங்கள் முதலியவைகளை விரிவாக முகப்பாயிரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், சித்த முறை உலக நன்மைக்காக எழுதிய காரணத்தினுல் இவ்வைத்தியத்தை வியாபாரமாகவும், அல்லது பணத்திற்காக கிரயம் செய்யவும் பணம் சேர்க்கவும் கூடாது. அப்படி விதித்த விதிகளை மீறி நடந்தால் சித்தர்கள் சாபம் வந்து சேருமென கருதப்படும். வைத்தியன் பேராசைப்படுவான் எனக் கருதியே அனேக கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சித்த முறையில் கண்டமனக் கோட்பாடு, ஞானம் இவைகளை வைத்தியனை நியாயம், உண்மை ஒழுங்கு ஆகிய இவ்வழிகளில் புகட்டுவதற்காகவே நூற்களில் கண்டிருக்கிருர்கள். ஆகையால் இவைகள் சித்த வைத்தியத்திற்கு ஆதரவு கொடுக்கும் ஓர் கட்டத்தின் மூலக்கற்களாகக் கருதப்படும்.

சித்த வைத்தியத்தின் தற்கால நிலைமை :-

இறந்த காலத்தின் நோக்கம் எவ்வளவுக்கு எவ்வளவு நீள்கிறதோ அவ்வளவிற்கும் எதிர்காலத்திய நோக்கம் விளக்கமாக புலப்படும். ஏனெனில் சென்ற காலங்களில்தான் நிகழ் காலத்தையும், எதிர்காலத்தையின் போக்கையும் அறிவதற்கு திறவுகோலாகும். ஆகையால், வைத்தியத்தின் முன்னேற்றத்திற்கும் தற்காலத்திய வைத்திய பயிற்சிக்கும், ஆதிகாலாத்திலிருந்து தொன்று தொட்டு வந்த பூர்வ முறைதான் தகுந்த ஆதாரமாகும். பூர்வகாலத்து சிரோன்மணிகள் செய்த வேலைகளையெல்லாம், தற்காலத்தில் புதிதாக கண்டு பிடித்ததாகச் சொல்லப்பட்ட காரியங்கள் மறைத்து விட்டது என்பது மிக்க பரிதபிக்க வேண்டிய விஷயமாகும் ஏதோ சித்தர்களைப் போன்ற மகான்களுக்கு தற்காலத்தில் ஓர்வித பயபக்தி விசுவாசம் காட்டினுலும், பொதுவாக தற்காலத்து வைத்தியம், அதற்கு வேண்டிய முக்கியமான அம்சங்களை பெறுவதற்கில்லை இக்காலத்தில் பூர்வத்து வைத்திய சரித்திரங்களை சரிவர போதிப்பதில்லை. முன்னேர்கள் முறையைப் பற்றிய புத்தகங்களும் கிடையாது. ஆனுல் பழைய காலத்து சித்த வைத்தியத்தை தற்காலத்து சனங்கள் ஆச்சரியமாகவும், பயன்படாத மறைந்த வஸ்துவாக கருதுகிருர்கள். ஆகவே, தற்காலத்தில் தோன்றியுள்ள

இளைஞர் கூட்டங்கள், பண்டைய வைத்தியச் சரித்திரங்களின் உண்மையானக் கருத்திற்காக மெச்சி, கற்காலத்திய வைத்தியத்திற்கு சமமாகக் கொண்டுவர முயற்சிப்பதை நோக்க மிகவும் உற்சாகத்தை யளிக்கத் தக்கது.

மேலும், ஆன்ரேரின் சரித்திரத்தையும், அவர்களது பயிற்சியையும், அற்பமான பாராயணப் பாடமாகக் கருதப்படாது; நோய் பரிகார முறையிலும், காயகற்ப முறையிலும் அதிக தேர்ச்சியடைந்தவர்கள் செய்த உபயோகமுள்ள நூலெனக்கொள்ள வேண்டும். எவ்வளவு குறைவாகவும், இரகசியமாகவும் சொல்லி யிருந்தாலும், அது மேம்பட்ட கொள்கையாகவே கருத வேண்டும். ஏனெனில் தற்காலத்திய கஷ்டமான விஷயங்களை பூர்வத்தில் கண்டறிந்த தேர்ச்சியைக் கொண்டு அறிந்து கொள்ளும் வகையில், நமக்கு எவ்வகையிலும் உதவியளிக்க கொஞ்ச மேனும் தவறாது. எந்த காலத்தில் மேனாட்டு உலக சம்பிரதாயங்கள் கீழ்நாட்டு ஞானமார்க்கத்திலர் ஒன்றுபடுமோ, அப்பொழுதுதான் நமது நாட்டு வைத்தியத்திற்கும் மேனாட்டு வைத்திய முறைக்கும் உள்ள பேதங்கள் மறைந்துபோம். ஆனால்,எப்பொழுது இது விஷயம் சம்பவிக்குமோ, என்பதுதான் அடுத்து கேள்வி. நமக்குள்ள ஆன்ம சக்தியை விருத்தி செய்யாத வரையிலும் நாம் முழுவதையும் அடைந்து விட்டோமென நினைக்கப் படாது.

சித்தர்கள் தமிழிற் செய்த வைத்திய நூற்களினாலே, தமிழ் வைத்திய முறையே மிக்க விசாலமான ஆதரவு பெறும்படி தாபிக்கப் பட்டிருக்கிறது. இத்தகைய முறை, திராவிடர்களுடைய அறிவினாலேற்பட்ட விஷயங்களில் ஓர பகுதியெனக் கொள்ளப்படும். இத்தமிழ் முறையே, ஆதிகாலம் தொட்டு இந்தியாவின் தட்சண பாகத்தில் ஒவ்வொரு மூலையிலும் இடங்களிலும், தற்காலம் பரவியிருக்கிறதென்பதை அதிகமாக சொல்ல வேண்டிய அவசியமில்லை. இந்த சித்த முறையானது. ஆயுள்வேதம், யுனானிமுறை இவ்விந்தியாவுக்கு கொண்டு வருவதற்கு அனேக ஆயிர வருஷங்களுக்கு முன்னிருந்து பரவியிருந்திருக்கிறது. அனேக ஆயிர தமிழ் வைத்தியர்களும், தங்களுடைய மூதாதையர்களிடமிருந்த இந்த சித்தமுறையைக் கற்று தேர்ச்சியடைந்திருக்கிறார்கள். ஆகவே, இம்முறையை அனேக தலைமுறைகளாக தகப்பனிடம் இருந்து கற்று பிள்ளைகள் கையாண்டு வந்தார்கள். இத்தமிழ்சித்தர் முறை பூர்வ காலத்தில் ஆண்டு வந்த சேரன், சோழன், பாண்டியன் ஆகிய தமிழ் அரசர்கள் ஆதரவு பெற்று மிகவும் சிறப்புப் பெற்றிருந்தது. இப்பொழுதும், கல்விக் களஞ்சியங்களில் அச்சுப் பதிப்புக்கு வெளிவராத எண்ணிறந்த ஏட்டு பிரதிகள் இருந்து வருகிறது. இதுவுமல்லாமல், அனேக திறமை வாய்ந்த வைத்தியர்களும் தங்களுடைய மேன்மை பெற்ற அறிவுத் தேர்ச்சியையும், அனுபவத்தையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் இரகசியமாய் வைத்திருந்த விஷயத்தையும் நோக்கில், சித்த வைத்தியம் சீரழிந்து போனதற்கு இவைகளே காரணமாகும்.

மனிதர்கள் தங்கள் ஆரோக்கிய நிலையை காப்பாற்றிக் கொண்டு, வாழ்நாட்களை அபிவிருத்தி செய்வதற்கு ஆதாரமான இந்நூற்கள், மற்றவைத்திய முறை கொள்கைகளைப்போலல்லாமல், இம்முறையின் கொள்கைகள் உண்மையான நெறியிலே தாபிக்கப்பட்டதால், இதை ஒருவராலும் மறுக்க முடியாது. அனேக ஆயிர வருஷங்களைப் பற்றிய கொள்கையைத் தவிர மற்றெவ்வித்திலும் தற்காலத்திய மேனாட்டு வைத்தியர் குறைகூற முடியாது. ஏனெனில், அவர்கள் 'பரிசோதனைக்கு எள்ளளவும் சளைக்காது. ஆனால் மேற்சொன்ன பூர்வ் கர்ம விஷயங்கள், மேனாட்டு நூற்களுக்கு எட்டவே எட்டாது.

ஆயுள்வேதமும், மேனாட்டு வைத்தியமும் தென்னிந்தியாவாகிய தமிழ்நாட்டுக்கு கொண்டு வரப்பட்டாலும், ஊர்களிலும், கிராமங்களிலும் அனேக ஆயிரக் கணக்கான நோயாளிகள், இச்சித்த முறையை கைக்கொண்ட நாட்டு வைத்தியர்களால் சிகிச்சை செய்யப்பட்டுவருகிறார்கள். இச் சென்னை மாநிலத்தில் மட்டுமல்ல, பர்மா, இலங்கை, பினாங், சிங்கப்பூராகிய கடற் பிரதேச நாடுகளிலும், கீழ்க்கரை தீவுகளிலும், மடகாஸ்கர், பிலிபைன் தீவுகள் முதலான விடங்களிலும், வைத்திய முறை மிக்க பிரபல்லியமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

சித்த முறையின் கொள்கையைப் பற்றி பேசுப்புகின், இது விசாலமான கேள்விகளுக்கு இடங் கொடுக்கும். இலோசான கேள்விகள், பதில்கள் என்ற கருதி திடீரென சொல்லிவிட முடியாது. சித்தர்களின் நோக்கத்தின்படி இச்சித்த முறை இவ்வுலகத்து விஷயங்களையும் சார்ந்ததாகும். ஆகவே, 'அண்டமும், பிண்டம் ஒன்றே' என்னும் கருத்து இதனுள் அடங்கியுள்ளது. இவ்விஷயம் மேனாட்டாரின் பூர்வீக இரகசிய கொள்கைக்கும், இந்திய சித்த முறைக்கும் சமத்துவமானது. மேலும், சித்த முறைப்படி அண்டபிண்ட கோட்பாடுகளினால் வைத்தியத்திற்கும், சோதிடத்திற்கும் சம்பந்தம் ஏற்படுகிறது. ஆகையினால், ஒவ்வொரு வைத்தியனுக்கும் சோதிடத்தில் சொற்ப அறிவு இருக்க வேண்டியதென்பது மிக்க அவசியமான விஷயம். இவ்வறிவு இல்லாவிட்டால் வைத்தியம் செய்வது அவ்வளவு உபயோகமான முறையில் இராது.

சித்த வைத்திய முறை :-

மனிதரின் நோய்க்காக வேண்டி சித்தர் முறையில் வைப்புசரக்கு நூல் உதவியைக் கொண்டு தயாரிக்கும் மருந்துகளும், முறைகளும், அவையாவன.

1. இரசம் அல்லது சாறு - இலைச்சாறு, பழச்சாறு முதலியன.
2. பாகு - வெல்லபாகு அல்லது சீனிப்பாகு முதலிய.
3. சத்து - அப்பிரக சத்து.
4. எண்ணெய் - சாதிக்காயெண்ணெய் முதலியன.
5. தைலம் - சந்தனாதி தைலம்.
6. நெய் - கும்மட்டிக்காய் நெய்.
7. குழம்பு, கும்மட்டிக்காய் குழம்பு.
8. சூரணம் - சீந்திற் சூரணம்.
9. திராவகம் அல்லது வாலை நீரு, தீ நீரு. திராவகம், ஓமத்திராவகம்.
10. நீறு அல்லது பற்பம். வெள்ளி பற்பம்.
11. செந்தூரம் - இரச செந்தூரம்.
12. காரமருந்து அல்லது சுண்ணம் - காடி காரம், முத்துச் சுண்ணம்.
13. மாத்திரை - கோரோசனை மாத்திரை.
14. மெழுகு
15. உப்பு - கெந்தக உப்பு
16. பதங்கம்.

1. வாதம் - வைத்தியம்

சித்த வைத்தியம், நான்கு விஷயங்களை உடையது. அதாவது, வாதம், வைத்தியம், யோகம், ஞானமென்று இதற்கு முன்னமே காட்டியுள்ளது. பூர்வீக இந்தியாவின் தென்னாட்டில், இந்த நூற்பயிற்சியில், முதல் இரண்டு விஷயங்கள் மற்ற இரண்டிற்கும் ஆதாரமாகவுள்ளது. தென் இந்தியா நூலாசிரியர்களெல்லாம் ஒருவர் மாதிரியே வாதத்தை வைத்தியத்துடன்

ஒன்றுபடுத்திக் கூறியுள்ளார்கள். ஏனெனில், தாங்கள் கொண்ட கருத்தின்படி, கடைசியாக மோட்ச சாதனம் அடைய வேண்டும் என்பதே. மேற்சொன்ன வாதம், வைத்தியம் இரண்டிற்கும் ஏம வைத்தியமென்றும், மற்ற யோகம், ஞானம் என்ற இரண்டிற்கும் பிரம்ம வைத்தியம் என்றும் பெயர். தன்னைக் காத்துக்கொள்ளவும், ஒருவனைக் காப்பாற்றவும், வாதம், அவசியமானதால் கடைசியாக அவன் கொண்ட கருத்தை பூர்த்தி செய்ய உதவியாயிருக்கும்படி இவ்வாதத்தை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் வைத்தியமோ, நோய்களை தகுந்தபடி நிவர்த்திக்கவும், தடுக்கவும், வேண்டிய காலமட்டும் தன் உடம்பை நிலைக்க செய்வதற்கும், வசதியாகவிருக்கும்படி ஏற்படுத்தப்பட்டது. சித்தர்கள் இவ்விஷயத்தை தங்கள் முதல் வேலையாகக் கொண்டு, நோய் தங்களைத் தாக்காமலிருக்கவும், மரணத்திற்கு அஞ்சாமலிருக்கவும் ஏற்படுத்திக் கொண்டார்கள். அடுத்தபடி அவர்கள் கிழத்தனம் அடையாமலிருக்க வேண்டி உலோக வகைகள் கலந்த வைப்புச் சரக்குகளாகிய பற்பம், செந்தூரம், சுண்ண மருந்துகளைச் சாப்பிட்டு காயத்தை பலப்படுத்தியும், ஆன்மாவை ஒருமைப் படுத்திக்கொண்டார்கள். ஏனெனில், சதா யோக சாதனையால், தங்கள் ஆயுளைவிருத்தி செய்துக்கொண்டு, மனித சிருஷ்டியையும், உலகப் போக்கையும் செவ்வையாக தெரிந்து கொண்டு பிறகு, தன்னைத்தான் அறிந்தவுடன் மோட்ச சாதனையில் சித்தி பெறுவதற்கு ஈடுபடுவார்கள். ஆகவே, இவ்வகுப்பு சித்தர்களுடைய நூற்கள் முழுமையும், அவர்கள் சித்தியடைந்த பிறகுதான், யூகத்தினால் கண்டறிந்த கருத்துக்களை, அவர்கள் வகுப்பின் பாஷையில் எழுதலாயிற்று, ஆகையால், இவ்வித சித்தர்களுடைய வாத வைத்தியமானது. மேனாட்டு கிரேக்கர்களுடைய நான்கு விதமான ஞானபோதனை சாதனைகளுக்கும், ஆறு விதமான இந்திய ஞான சபைகளுக்கும், தற்காலத்தில் ஆதாரமுள்ளதாக கருதப்படுகிறது.

வாத மார்க்கம் :-

வாதத்தை மாத்திரம் தனிப்பட்ட முறையில் பேசப்புகின், மேற்கண்ட நான்கு வகுப்பான சித்த நூற்களில், இவ்வாதமுறை, மற்ற மூன்று முறைகளான வைத்தியம், யோகம், ஞானம் இவைகளுக்கு மூலகாரணமாகவுள்ளதல் முதன்மையாக வைக்கப்பட்டிருக்கிறது. இதை தெய்வத் தன்மை பொருந்திய நூலென்றும், சிறப்புற்ற தொழிலென்றும் கருதப்படுவதால், பயபக்தியுடன் பாராட்டவேண்டும். இந்நூலைக்கொண்டு வஸ்துக்களையும், அவைகளின் தன்மையைப் பிரிக்கவும். மறுபடியும் ஒன்று சேர்க்கவும். அதுவுமல்லாமல் இழிந்த உலோகங்களைத் தங்கமாக மாற்றவும், வைத்தியம், காய கற்பம், யோகம் முதலிய சித்திகளுக்கு வழியும் காண்பிக்கும்படியும் செய்யலாம். ஆகையால், வாதமானது, தாது, தாவர, சீவவர்க்கங்களின் உதவியைக் கொண்டு, இரும்பு, செம்பு, முதலியவைகளை அநேக வழியில் பொன்னாக மாற்றக் கூடிய விஷயங்களை விவரமாகச் சொல்லும் வைப்புச் சரக்கு முறையின் ஓர் பாகமாகக் கருதப்படும். சித்தர் நூலின்படி இவ்வாதமுறை ஆன்ம சக்தியை மூலமாகக் கொண்டது. ஆகவே, மனிதருக்கு இயல்பிலேயமைந்த ஞான அறிவுக்கு இதை பொன்னிழைக்கும் உறை கல்லாகக் கருதப்படும். ஒருவன் முதலில், சில கிரகங்களின் அமைப்புக்கு தக்கவாறு பிறந்து, பிறவியிலேயே வாதியாயிருக்க வேண்டும்.

II. பஞ்சபூத தத்துவம்

சித்தர் நூல் முறைப்படி உலகத்திலுள்ள சடப்பொருள்களுக்கெல்லாம் பஞ்ச பூதமே அதாவது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்பன ஆதாரமாகவுள்ளது. சடமிறந்தால் அல்லது அழிந்தால், மேற்கண்ட ஐம்பூதங்களும் வெவ்வேறாகப் பிரிந்துபோம். ஆகவே, மனித உடம்பும் மேற்கண்ட ஐம்பூதங்களினால் ஆக்கப்பட்டவையாதலால், மனிதன் இறந்தவுடன் அவனின்று பிரிந்து விடும். மனிதவுடம்பு எப்படி ஐம்பூதங்களால் ஆக்கப்பட்டவையென்றால்.

1. மண்-எலும்பு, சதை, நரம்பு, தோல், மயிர்.
2. தண்ணீர் - பித்தம், இரத்தம், விந்து, கசிவு அல்லது கழிவு, வியர்வை.
3. நெருப்பு - பசி, தாகம், தூக்கம், அழகு, சோம்பல்.
4. காற்று - சுருக்கம், விரிவு, அசைவு,
5. ஆகாசம் - வயிறு, இருதயம், கழுத்து, தலை இவைகளிலுள்ள இடைவெளிகள்.

ஆகவே, மேற்கண்டபடி உலக வஸ்துக்களெல்லாம், தோன்றலும், ஜீவித்தலும், அசைவதும், வளர்வதும், கடைசியாக அழிவதும், பழையபடி பஞ்சபூதங்களாகமாறுகிறது. என்பது இதனால் விளங்குகிறது. ஆகையால், உலகத்தில் முத்தொழில் அதாவது சிருட்டி, காப்பு, சங்காரம் இவைகளுக்கு ஐம்பூதமே காரணமாகவுள்ளது.

மேலும், இவ்வைம்பூதத் தொழில்களை கவனிக்கப்புதின், முதலாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில், இப்பூதங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து சீவ அணுக்களாகின்றது. இச்சீவாணுக்களிலிருந்து உடம்புக்குரிய வஸ்துக்கள் எல்லாம் ஏற்படுகிறது. இரண்டாவது, இச்சீவாணுக்களே தங்களுக்குள்ள தொழிலியற்றும் சக்தியால் உடம்பிற்கும், மனதிற்கும் வேண்டிய அம்சங்களை கொடுக்க ஏதுவாகிறது. ஆகவே, உடம்பின் சிருஷ்டிக்காதாரமான தொழில்களே வாதமென்றும், பாதுகாப்புக்கு வேண்டியதே பித்தமென்றும், அழிவுக்கு ஏதுவான தொழிலே கபமென்றும் கூறப்படும். மனதிற்கு பொருத்தமான உடம்பில், மேற்கண்ட சீவாணுக்களின் தொந்தத்தினால் ஏற்பட்ட முக்குணம் என்ற சத்துவம், ரஜோதம், தாமசம் ஆகிய, இவைகளால் தொழில் நடத்தப்படும். ஆகவே, மேற்கண்ட இருவித தொழில்களுக்கும், சம்பந்தமுண்டு. இவ்விதமாக ஆத்மா, மனது, உடம்பு ஆக இம்மூன்றும் சேர்ந்தது புருஷம் என்று சொல்லப்படுவது. மனதையும், உடம்பையும் தொழிலியற்றவும் பிரதிபலன் தூண்டவும் செய்யும். உடம்பிலெழும் சக்திக்கே ஆன்மா காரணமாக இருந்தாலும் ஆன்மா மாத்திரம் ஒரு பற்றுமன்றி ஒன்றுக்கும் அசையாமல் சுதேச்சையாய் நிற்கும்.

உடம்பையும் மனதையும் நோக்குங்கால் சீவாணுக்கள் தொழிலின் மூலப் பகுதியே நரம்பிலிருந்து எழும்பி, உடம்பைப பூரண நிலைக்கு கொண்டுவரும். ஆன்மாவினால் உருப்பட்ட இத்தேகமானது, ஒருயந்திரத்திற்கு எப்படி மண்ணெண்ணெய் அல்லது நிலக்கரி தொழிலியற்றுவதற்காக அவசியமோ, அதுபோல் நமது தேகம் உயிர்வாழ்வதற்கு பிரதானமாகும். ஆகவே, அளவிலும், குணத்திலும் ஒழுங்குபடுத்திக் கொள்ளும் உணவுதான் பௌதிகப் பிரிவினையும், மாறுபாட்டையும் அடைந்து, பிறகு அன்னக் குழம்பு அல்லது அன்னரசமாகி இரத்தத்தைச் சேரும். அதன் பிறகு, அதினின்று உடம்பில் சதை கொழுப்பு, எலும்பு, கடைசியாக பசையாகவும், விந்தாகவுமாறும். இவ்விதமாக

அடுக்கடுக்காய் அபிவிருத்தியடைந்த தொழில்கள்தான் இனி கீழ்சொல்லப்படும் முப்பிணியாக வாதபித்த சிலேட்டுமங்களுக்கு காரணமாகும்.

அடியிற் கண்டபடி மனிதவுடம்பில் பஞ்சபூதங்கள் தங்கி நிற்கும் இடங்களாவன :-

1.2. பிருதிவி, அப்பு ஆக இரண்டும், உடம்பின் சதையில் பற்றிய உஷ்ணத்தை பரவச் செய்வதற்கு காரணமாக நின்று உடம்பை வளர்க்கச் செய்யும்.

3. தேயு அல்லது நெருப்பு - உடம்பில் உஷ்ணம் எழும்புவதற்கு காரணமாகும். இவ்வுஷ்ணமே உணவை இரசமாக மாற்றி சீவாணுக்களை ஏற்படுத்தும்.

4.5. வாயு ஆகாசம் ஆகிய இரண்டும் மூளையிலும் நரம்பு பாகங்களிலும் தங்கி நிற்கும்.

III. சித்த வைத்திய முறைப்படி திரிதோஷ கொள்கை:-

இக்கொள்கையானது, வியாதிகளின் காரணங்கள், நிவர்த்தியாகும் தன்மை, குறிகள் ஆகிய இவைகளைக் குறிக்கும். இதனல், பொதுவாக சிகிச்சை முறைகளை தெரிந்து கொள்வதற்கு எதுவாகும். இம்முப்பிணிகளும் முறை தப்பினால் நோய்க்கு காரணமாகும் இது மனிதனுடைய உடம்பில் வாத பித்த சிலேட்டுமத் தொழில்களைக் குறிக்கும்.இவ் வார்த்தைகளின் அர்த்தமும், செயற்கையும், இன்னதென்று சாதாரண மனிதர்களுக்கு புலப்படாது. அதற்கு மனிதனைக் குறித்து பூர்வீக நூலிற் கண்ட விஷயங்களைப் பற்றிய அறிவும், கல்வியும், அவனின் ஆத்மா, உயிர் வசீகரம், தெய்வீகம், விஷயங்களைப் பற்றிய அறிவும், கல்வியும், அவனின் ஆத்மா, உயிர் வசீகரம் தெய்வீகம், விஷயங்களில் ஈடுபட்டிருக்கிற தன்மையும், ஆகிய இவை முதலானதும் தெரியவேண்டும். இம் முப்பிணியைத்தன் ஆயுள் வேதத்தில் திரிதோஷம் என்று கூறப்படும். இதை சித்த வைத்திய முறையில் தத்துவங்கள் என்று கூறப்படும். அதாவது தொழிலையும், தொழிலியற்றும் தன்மையையும் குறிக்கும். சாதாரணமாக தேகத் தத்துவங்கள் 645. இக்கருவி கரணுதிகள், அந்தக் கரணங்களையும், ஆத்துமபோதத்தையும் அல்லது இரண்டையும் குறிக்கும்.

இம்மூன்று தத்துவங்களின். தொழில்கள் மாறுபடுவதே தோஷங்கள். இவைகளையே ஆயுள்வேதத்தில் திரிதோஷமெனப்படுவது.

வாத பித்த சிலேட்டுமந்தான் மனிதவுடம்புக்கு ஆதாரமாகவுள்ளது. ஆகவே, இதை முக்கியமான அம்சங்களெனக கொள்ள வேண்டும். நாம் உட்கொள்ளும் உணவு, நீர் காற்று இவைகள் உட்கருவிகளினுல் சீரணமாகி அன்னப்பசையாக மாறி உடம்பை போஷிக்கும். ஆகவே, கட்டடங்களின் தூணைப்போல் பாவிக்க வேண்டும். உடம்பைக் காத்தலால் சித்த வைத்தியத்தில் இவைகளை ஆதார தாதுக்களெனச் சொல்லப்படும். இத் தத்துவங்களின் கெடுதிதான் திரிதோஷம். ஏனெனில், இதனுல் தேகசதை பாகங்கள் ஆரோக்கிய நிலையில் இராது.

மனிதனுக்குள் சூக்கும சக்திகள் மூளையிலும், முதுகுத் தண்டின் கயிறுக் குள்ளும் அமைந்திருக்கும். இதுவே மனிதனுக்குள்ள பிராண சக்தியாகும். இப்பிராண சக்தியாகிய வாதத்தோடு பித்த சிலேட்டுமம், கூட்டில் முப்பிணி எனப்படும். ஆகவே, இத்திரிதோஷ நிலையையே ஆரோக்கிய காலத்திலும், நோய்கொண்ட வேளையிலும் கவனிக்க வேண்டிய விஷயமாகும். நமது நாட்டு வைத்தியர்கள். ஒருவன் நோய்வாய்படும் காலத்தையும், அதற்கு பின் நோய்ப் பிரிவினையையும், தெரிந்து கொள்வதற்கு, இத்திரிதோஷத்தின் காரணம், குறிகள், குணங்கள், ஆகிய இவைகள் இன்றியமையாத விஷயங்களாகும்

இம்முத்தோஷமும் சகசமாக தன்னிலையில் இருந்தால் தான் உடம்பில் ஆரோக்கியத்தையும், பலத்தையும் நிலை நிறுத்தலாம். அப்படியில்லாமல் இது அதிகமானுலும், குறைந்தாலும், தொந்திரவுகள் ஏற்பட்டு கடைசியாக நோய்க்கிடங்கொடுக்கும்.

A. நோய்கள்

சித்தர் முறைப்படி, மூன்றுவித அறிவு பேதங்களும், ஐம்புலக் கருவிகளையும், பன்னிரண்டுவிததேகக் கூறுபாடுகளைப் பெற்றுள்ள விந்து நாதத்தையும், சீரணித்த வஸ்துக்களையும் தாக்குதலினுல், அவைகளின் சகசமான தொழிலியற்றும் செயல்கள் மாறுபடும். இதைத் தான் வியாதி அல்லது நோய் எனக் கூறப்படுவது. காலம் அறிவு, புலன் இவைகள் தொழிலியற்றும் செய்கைகளில் குறையின்றி இருந்தால், அதையே ஆரோக்கியம் என்றும் கூறப்படும். ஆகவே, நோயென்பது உடம்பையடுத்த தொழிலின் பேதத்தினுல் மாத்திரமல்ல, மனோ விகற்பத்தையும் சார்ந்ததாகும். இது மனோ ஆரோக்கியம் என்பதே தேக ஆரோக்கியம் ஆகும் என்னும் பழமொழியைக் குறிக்கும். ஆகையால் நோய் என்பது தேக வியாதி மனோ வியாதி என இரண்டு விதமாகும். ஒன்றே மற்ருென்றுக்குக் காரணம். உண்மையாகவே மனோவியாதி தேக வியாதிக் கிடங்கொடுக்கும் அப்படியே, தேகவியாதி மனோவியாதிக்கிடங் கொடுக்கும். இவ்விருவிதமான நோய்களுக்கும் தேகத்தின் கூறுபாடே ஆதாரமாக உள்ளது.

கர்ம வியாதிகளைப் பற்றிய விதிகள் :-

கர்மா னுசாரம் என்பது அடுத்த சன்மத்தின் தீக்கரும காரணத்தினுல் சூக்கும் தேகத்திற்கு ஏற்படும் ஒர் கெடுதி, இத்தகைய எல்லா நோய்களும் பூர்வ சன்ம கரும காரணத்தால் ஏற்பட்டது. அதில் சிலது இயற்கையான காரணத்தினுல் சூக்கும தேகத்திற்கு ஏற்படும் ஓர் கெடுதி. இத்தகைய எல்லா நோய்களும் பூர்வ சன்ம கரும காரணத்தால் ஏற்பட்டது. அதில் சிலது இயற்கையான காரணத்தினுலும், சிலது தெய்வ குற்றத்தினுலும் உண்டானது. இவ்வித மூல காரணங்கள் காலப் போக்கினுல் தான் நிவர்த்தியாகும். இயற்கையாலும், கிரகசம்பந்தத்தினுலும் ஏற்பட்ட கெடுதிகள் தீரும் வரையிலும் வினைப் பயன்களுக் குண்டாகும். பிராயசித்தம் ஏற்படும் வரைக்கும் இது இருக்கும்.

மேலும் பரம்பரை வழியாயும் வியாதிகள் ஏற்படும். இது சித்த முறைப்படி முன் சன்மம் அல்லது சன்மங்களின் வினைப்பயன்கள் காலம் சக்கரத்தில் அறியக் கூடாத காரணங்களினுல் தாய் குழந்தைகளை பிற்காலத்தில் தாக்கும்.

நோயின் காரணங்கள் :-

நோயானது தாதுக்களின் தோஷங்களின் கோளாறுகளினுல் ஏற்படும். அவை உள் அல்லது வெளிக் காரணங்களினுல் உண்டாகும். உடம்பை அடுத்த நோய்கள் அல்லது சன்ம ரோகங்கள் உட் காரணத்தினுலென்றும், அடியிற் கண்ட விஷயங்களின் கோளாறுகளினுல் தேகத்திற்கு ஏற்பட்ட நோய்கள் என்றும் கூறப்படும்.

1. தாதுக்கள்- முத்தோஷம்
2. தாதுப் பிரிவு - 7 வகை தாதுக்கள்
3. குணம் - மனத்தை நடத்தும் விதிகள்
4. மலம் கசிவுகள், கழிவுகள்

(Inter cellular) ஜீவாணுக்களும், கண்ணறைகளின் நடையும், சகசமாக

இருந்தால்தான், தாதுக்களின் சம நிலைக்கு யாதொரு கோளாறுகளும் ஏற்படாது. இவ்விதமாகவே இருப்பதற்கு உணவுப் பகுதி கணக்குப்படி இருக்க வேண்டும். அதைச் சுற்றிலுமுள்ள விஷயங்களும் அப்படியே சரசமாய் இருக்க வேண்டும். இவ் விதமாக நடக்கத் தவறினுல் நோய்களுக்கிடமுண்டாகும்.

சன்மரோகங்கள், பிறவியிலேற்பட்டதானுலும் அல்லது தேகத்தை அடுத்ததானுலும் சரி, இவைகளுக்கும், மேற்சொன்ன ஜீவாணுக்கள், கண்ணறை கடைகளுக்கும் யாதொரு சம்பந்துமு மில்லை. ஏனெனில், பிறவியி லேற்பட்ட நோயெல்லாம் நாத விந்துக்களின் கருவில் ஏற்பட்டதாகும். நாளடைவில் உடம்பு பருக்க பருக்க பிறந்த அனேக வருஷங்களுக்குப் பின் கருவிலேற்பட்ட கோளாறுகள் கிரகத்தின் தோஷ மூலியமாய் சில அவயவங்களின் காணப்படும். ஆகவே, இத்தகைய நோய்களெல்லாம் முதிர்ந்த வயதில் தான் காணும்.

காரணத்தை கண்டு பிடிக்க முடியாத நோய்கள், கருவி லேற்பட்ட தோஷங்களினுல் தந்தை தாயாரிடமிருந்து குழந்தைக்கு வந்து சேர்ந்ததெனக் கொள்ளலாம். அவ்விதமான நோய்கள் எப்போது ஆரம்பமாகுமென்பதை ஒருவரும் சொல்லிவிட முடியாது. கிரகங்களின் அம்சப்படி அனேக தலை முறைகள் வழியாய் மெதுவாகத்தான் வரும். ஆகவே முன் சொன்னபடி உடம்பின் கண்ணறையின் செயலுக்கும், கர்ம வியாதிக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. வெளிக் காரண நோய்களோ, பல காரணங்களினுல் உண்டாகும். அவை யாவன 1. அபாயம் 2. பாஷாணம் : 3. மனோவசியம் : 4. காயம், ரணம், வெட்டு, நீரில் அமிழ்தல், வாயுக் குற்றம் முதலியன : 5. மந்திரம் 6. தேவதை அல்லது பேய் பிசாசுகளினுலேற்பட்ட வினைகள்.

வாதம் அல்லது வாயு :

இது காற்று மாத்திரமல்ல, உடம்பின சீவாணுக்களுக்கு அசைவு, சக்தி, உயர்ச்சி இவைகளைக் கொடுக்கக் கூடியது. வாத பேதத்தினுல் வாத நோயக்ள உண்டாகும். மூச்சு விடுவதும், இரத்தம் உடம்பில் சுழலுவதும், உடம்பின் கழிவுகளும், மேலும் காது கேழ்ப்பது, பார்ப்பது, ருசிப்பது முதலானவைகளுக்கும் வாதத்தின் நரம்புத் தொழிலே காரணமாகும். தாமச குணத்தினுல் வாதம் கருப்பு நிறமெனப்படும். வாதமே மிகவும் பராக்கிராமமுள்ள நரம்புச் சக்தி யாகும். அணுக்களுக்கும் தாதுக்களுக்கும் வலிவைக் கொடுக்கதக்கதாகும். தொழிலியற்றுவதில் இதன் முக்கியமான குணங்களாவது. வரட்சி, இலேசு, சுத்தம், குளிர்ச்சி, அசைவு, சுக்குமம் ஆகிய இவைகளாம். அதன் தொழில்களாவன - அசைவுண்டாக்கல், உதாரண வாயுவாக நின்று பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சிகளை அறிவிப்பது, நாம் கொள்ளும் உணவை சரியான முறையில் வயிற்றில் கொண்டு போய் சேர்ப்பது, சீரணித்த அன்னக் குழம்பி னின்று கழிவுப் பொருள்கைள பிரித்தல், மூத்திரத்தையும், விந்து முதலானதையும் நிறுத்தி வைப்பது.

வாதம் அதிகரித்தால்:- பின்னுல் உடம்பு சதையின் சொரசொரப்பு, கருநிறம், இணைப்பு, கை கால் நடுக்கம், உஷ்ண வஸ்துக்களில் பிரியம், தூக்க மின்மை, பலக்குறைவும், வாதம் குறைவுப்பட்டால் களைப்பு பேச்சுக் குறைவு, அசதி, அறிவீனம் முதலானவையும் ஏற்படும் இது உடம்பின் கீழ் அதாவது இடுப்பு பாகத்தில் அமைந்துள்ளது. இதன் தொழிலியற்றும் சக்தி நரம்புப் பகுதியில் உள்ளது.

சாதாரணமாக நாம் மூச்சுவாங்கி மூச்சுவிடுகிறோம். உள்ளுக்கிழுக்கும் மூச்சோ, நுரையீரலுக்குள்போய் தங்கி நிற்கும்போது அது உடம்பினுள் புகுந்தும், கலந்தும்,

பரவியும். இது உடம்பில் சமரசமான தொழிலியற்றுங்கால் இதை வாத மென்கிறோம். இதுதான் பௌதிக முறையாய பிராண வாயுவோடு கலந்துஉடம்பில் சமத்துவமாக சூடுபரவச் செய்கிறது. அதற்கு தமிழில் வாத தத்துவம் என்று சொல்லப்படும். நரம்புப் பகுதிக்கு கோளாறு ஏற்பட்டால் வாதம அல்லது வாயு அதிகப்பட்டு அல்லது குறைந்தும் நோய்களுக்குக் காரணகிறது. வாயு என்பது காற்று அல்ல. ஏனெனில் அது நடுவாகவுள்ள மூலப் பகுதி நரம்புகளின் செயலாலும் உணர்ச்சி நரம்பின் செயலாலும் ஏற்படுகின்ற பேதங்களை தனக்குள் கொண்டதாகும். வாததேகி சாதாரணமாக பலவீனன். அவனுக்கு தாது மிகக்குறைச்சல், ஆகவே, அவன் நோயைத் தடுக்க முடியாது.

பித்தம் :-

இதை வெறும் பித்தமெனக் கொள்ளக்கூடாது ஏனெனில், இது உடம்பிற்கு ஊஷ்ணத்தை உண்டாக்கும் தன்மையிலும், நாம் உள்ளே கொள்ளும் உணவு செரிமானம் அடைவதற்கும், பிறகு இரத்தமாக மாறி நிறம் கொடுப்பதற்கும், மற்றும், செரிமான நீர் கணையத்திரவம், முதலியவைகளுக்கும், உடம்பின் சதை மூலத்திற்கும் உஷ்ணத்திற்கும் காரணமாகவிருக்கிறது. பித்த தேகியானவன் சாதாரண பலமும், வயதும் உடையவனுகிருன். இது பஞ்சபூதங்களில் மூன்ருவது பகுதியான நெருப்பினிடமாக உள்ள உஷ்ணத்தை உடம்புகிரகித்துக்கொள்ளும். ஏனெனில், எல்லா ஜீவப்பிராணிகளுக்கும் சிறிது உஷ்ணம் வேண்டியிருக்கிறது. நாம் உட்கொள்ளும் வஸ்துவை செரிக்க வைக்கவும், பிறகு போஷனைக்காக அவ்வஸ்துவினிடமிருந்து சத்துவை கிரகிக்கச் செய்வதுந்தான் இதன் தொழிலாகும். பித்தம் அதிகப்பட்டால் ஈரல் நோய்களுக்கு காரணமாகும் பித்தமானது மேற்சொன்னபடி செரிமானவாவதற்கு மாத்திரமல்ல, உடம்பு உஷ்ணத்திற்கும், சூட்டனவிற்கும் காரணமாகும் ரஜோதம் என்னும் குணத்தினுல் பித்தமானது உடம்பின் அழகிற்கும், சிவப்பு நிறத்திற்கும் காரணமாகும். பித்தத்தினுல் தேகத்தில் அணுக்களுண்டாகும். ஆகவே, இது உடம்பில் எங்கும் பரவி, சுழலும் தொழிலைக் குறிக்கம்.

உடம்பில் பிண்டோற்பத்திக்கு உதவியாக நின்று, கருவியற்றும் தொழிலினுல், தனிப்பட்ட முறைமையில் பிண்டத்தை உருவப்படுத்துதற்கு காரணமாயுள்ளது. இந்த பித்தம்தான் அன்னரசத்தை மாற்றி, சீரணித்த உணவின் சத்தை அனேக உறுப்புகளில் ஏற்றி, உடம்பு வளர்ச்சிக்கு ஓர் மூல வஸ்துவைக் கொடுப்பதும் இப்பித்தந்தான். இது இரத்தத்தெளிவு, இரத்தம, அன்ன ரசம், அன்னரசச் சத்து, ஷந்துச்சத்து இவைகளில் மறைந்து நிற்கும். அன்றியும் பரிசம், பார்வை, உஷ்ணம், நுட்பம், இலேசத் தன்மை முதலியவைகளும் பித்தத்தின் கூறேயாகும். மேலும், உடம்புச் சூடு, சீரண சக்தி, பார்வை, தாகம், பசி, உணவு விருப்பம், நிறம், அறிவு, ஞாபக சக்தி சுறுசுறுப்பு, உடம்பு மிருது முதலியவைகளை உண்டாக்கி, உடம்பைக் காப்பாற்றும்.

பித்த கோபம் அல்லது மாறுதலையடைந்த பித்த நிலைமையினுல் ஏற்படும் குறிகளாவன-உடம்பெசிச்சல், தோல் மஞ்சள் நிறமடைதல், வியர்வை அழுக்கு, பலஙீனம், மஞ்சள் மலம், மஞ்சள் மூத்திரம், தூக்கமின்மை, உடம்பில் உஷ்ணக்குறைவு, உணவு செரிமானத்தில் கோளாறு முதலியன.

கபம் அதாவது சிலேட்டுமம் :-

இது கப மாத்திரமல்ல, உடம்பின் உஷ்ணத்தை சமரசப் படுத்துந் தொழிலிலும், உடம்புக்கு ஆதாரமாகவுள்ள சளிசவ்வு, எலும்பு மூட்டுகளை காக்கும் சளித திரவம் முதலியவைகளை உண்டாக்குந் தொழிலிலும் ஈடுபட்டது. சாதாரணமாக வாத தேகியானவன் பலமுள்ளவனும், நீண்ட காலம் வாழக்கூடியவனுமாவான். இது பிருதிவி என்ற பூதங்களில் அமைந்துள்ளதால் இதை சிலேட்டுமம் என்றும் கூறுவதுண்டு. உடம்பிலுள்ள கண்ணறைகளுக்கும் (Inter Cellular) ஊட்டம் கொடுத்து உடம்பை வளரச் செய்யும். கபம் கோளாறடைந்தால் நுரையீரல் நோய் ஏற்படும். மேலும், உடம்பின் சதைமூலம், சளி சவ்வு இவைகளுக்கு கசிவுண்டாக்கி, ஈரம் தாங்கச் செய்யும். இது சத்துவ குணக் கூறுபாடானதால் நிறம் வெண்மையெனக் கருதப்படும், இது உடம்பின் அணுவாதி தத்துவங்களை காப்பாற்றும். உடம்பின் சதை பாகத்தை ஒன்று சேர்த்து கட்டுமஸ்தாய் இருக்கச் செய்யும். வாயுவின் சக்தியே கபமாகவும், பித்தமாகவும் மாறுதலையடைந்து தனித்தனியாகப் பிரிகிற தென்பதையும் உணர வேண்டும்.

உண்மையான உஷ்ணமே பித்தம்; கபமோ பொய்யுஷ்ணம் அதாவது உடம்பின் உஷ்ணம் அதிகரித்தால், சீதனத்தினுல் தடுத்து அணுத்திரள்களை அசையாமல் நிறுத்தி வைக்கும் தன்மையது அன்றியும், அது உடம்பிற்கு எதையும் சகித்துக் கொள்ளக் கூடிய சக்தியைத் தரும்.

மேலும், இக்கபம் அவயவங்கள் சரிவர பக்குவமடைவதற்கும், உடம்பின் வலிவு சுறுசுறுப்பு, குளிர்ச்சி, முதலானவை யுண்டாவதற்கும் இடங்கொடுக்கும். அன்றியும் இதன் தொழிலினுல் உடம்பின் அமைப்பை ஒழுங்கு படுத்துவதுமல்லாமல், பருமன் இவ்வளவென்றும், கழிவு பொருளும் உடம்பில் கிரகிக்கக் கூடிய செரிமான வஸ்துக்கள் இவ்வளவு என்கிற முறையையும் நிர்ணயிக்கும். இது சாலம் அல்லது கண்ணறைகளின் இடைவெளிகளை நிரம்ப செய்து சீதள வழியாய் ஒன்றுபடுத்தி, உடம்பின் அவயங்களின் உஷ்ணத்தினுல் ஏற்படும் தகிப்பைத் தடுக்கும் தொழிலியற்றும் கபமானது, வெண்ணிறமாகவும், குளிர்ச்சி, எண்ணெய்ப்பசையுள்ளதாயும், கை கால்களுக்கு சக்தியும், வலிவும், மிருதுத்தன்மையையும் கொடுக்கும்.

கோளாறடைந்த தபத்திரி குறிகளாவன - வெண்ணிற உடம்பு, சோம்பல், எலும்புப் பொருத்துகள் தளர்வுற்றதாக எண்ணுதல், அதி தூக்கம் முதலியன. இது உணர்ச்சி நரம்புப் பகுதியில் தொழிலியற்றும்.

சிகிச்சை விதிகள், கிரமங்கள் :-

தகுந்தபடி சிகிச்சை செய்வதற்கு சரிவர நோய்களை சோதிக்க வேண்டும். அதற்கு முப்பிணியை அனுசரித்துதான் செய்ய வேண்டும். ஆகையால், வைத்தியன் திருத்தமாக சோதனை செய்யப்புகின், அடியிற் கண்ட விஷயங்களை முக்கியமாய் கவனிக்க வேண்டும். அவையாவன - நோய் இன்னது என்றும், இன்ன அவயம் நேராக தாக்கப்பட்டதென்றும், இன்ன அவயத்தை அனுசரித்ததென்றும், சீதோஷ்ண நிலை, தேக வலிவு, செரிமான சக்தி, நோயாளியின் மனேகுணம், வயது, பழக்க வழக்கம் முதலிய மற்ற விஷயங்களையும் கவனிக்க வேண்டும்.

சித்தர்கள் நோக்கத்தின்படி மனிதனின் உள்ளுக்கிருக்கும் விஷயங்களில் புகாது செய்யப்படும் சிகிச்சையால் உடம்பின் நோய் குணப்படாது. ஆகவே. இவ்விதமான அறிவு முக்கியமாய் வேண்டும். முப்பிணியின் விஷயங்களைக் கண்டு தேர்ந்தும், அவைகளின் மாறுபாடுகளை தகுந்தபடி அறிந்தும், சிகிச்சை செய்தாலொழிய வைத்தியன் சித்திடையமுடியாது. அப்படி செய்யாத வைத்தியம் நூலுக்கு விரோதமானதென்றும், கெடுதியையே விளைவிக்குமென்று கருதப்படும். சிகிச்சை மூன்று விதங்ளென்று ஏற்கனவே சொல்லப்பட்டி ருக்கின்றது. அவையாவன - தெய்வ, மானிட, இராட்சக சிகிச்சைகள். சித்த முறையில் இராட்சச சிகிச்சையான கத்திகொண்டறுக்கும். வகை சொல்லப்பட்டிருப்பினும் அவைகள் அவ்வளவாக கையாள படவில்லை ஏனெனில், மற்ற இரண்டு வகைகளைக் கொண்டே சிகிச்சை செய்துவிடலாம் என்ற கருத்து.

நோய்களை சோதிக்கும் விதிகளும், விதமும் :-

நோய்களின் கூறுபாடுகளை சரிவர தெரிவதற்காக சோதிக்கும் வழிகள் பலவிதமுண்டு, உடம்பின் தாதுக்கள் தனிப்பட்ட முறையிலாவது, மற்ற ஒன்று அல்லது இரண்டுடன் கலந்தாவது கோளாறடையுமாஞல், சித்த வைத்தியத்தில் கைநாடி பார்த்து அதன் மூலியமாய் அறியலாம். இன்ன விதமாய் கோளாறடைந்திருக்கிறதென்பதை நிச்சயமய்த் தெரிந்து கொள்வதற்கு வேறு வகையான சோதனைகளுமுண்டு, அவையாவன-முழு உடம்பின் நிலைமை, குரல், நாக்கு, கண், மலம், மூத்திரம், உடம்பைத் தொட்டுப்பார்த்தால், நோயாளின் வெளித்தோற்றம், முதலானவைகளாம். இதுவுமன்றி, நெய்க்குறி (மூத்திரத்தில் எண்ணெய்ச் சொட்டு விட்டுப் பார்த்தால்) நெய்ச்சீலை, நீர்ச்சீலை, மணிக்கடை (அதாவது கயிற்றினுல் கையின் மணிக்கட்டின் சுற்றளவு அளந்த அளவை கொண்டு விரல் நீளங்களை எடுத்து அளந்து அதனுலேற்பட்ட வித்தியாசங்களைக் கொண்டு நோயின் கூறுபாடுகளைக் கண்டு பிடித்தலாகும். மேலும், வைத்தியன் நோயாளியின் தினப் பழக்க வழக்கங்களையும், நோய் எவ்வகையில் திடீரென்று ஏற்பட்டதென்றும் தெரிவதுடன், நோய்வாய்ப்படுமுன்னே சகசமாக ஏற்படும் குறிகள்-அதாவது தூக்க மின்மை, செரிமானம், பசிக்குணம், பெண்போகம், வெயிலில், காற்றில் திரிதல் இவை முதலனவைகளையும் தீரவிசாரித்தறிய வேண்டும். உடம்பிலுள்ள மூல காரணங்களை சரிவர தெரிந்து கொள்ளாவிடில், நோயின் கூறுபாடுகளைச் சோதனை வழியாய் கண்டு பிடிப்பது அசாத்தியமாக முடியும். ஆகவே, முதலாக நோயாளியின் உள் விஷயங்களையும், பிறகு வெளித்தோற்ற விஷயங்களையும் தெரிந்து கொள்வது மிக்க அவசியமானது. கடைசியாக, நோயாளியினிடமிருந்து சந்தேகப்படக் கூடிய விஷயங்களை அனேகமான கேள்விகள் மூலியமாயும் உண்மையைத் தெரிய வேண்டி கேக்கலாம். இது சாதாரணமாக எல்லா வைத்திய முறைகளிலும் உண்டு. இவ்விதமான சோதனை முறைகளுக்குக் கட்டுப்படாத நோய்கள் இருக்கவே இருக்காதெனக் கொள்ளலாம்.

வைத்தியன் நோயாளியின் முற்போக்கான விஷயங்களை தெரிவதென்றல், உள்ளும் புறமுமுள்ள தேகவலிவும், எதனுல் உடம்பிற்கு எதையும் தாங்க முடியாத சத்துகுறைந்த தென்றும், பல அவயவங்களின் சக்திகள் இவ்வளவு தான் என்றும், அதைச் சார்ந்த பல விஷகளையும் தீரக்கண்டறிய வேண்டும். சாதாரணமாக உடம்பில் இயற்கையாக அமைந்த எதிர்ப்புச் சக்தியானது. மனிதன்

ஆரோக்கியமாயுள்ள பொழுதும், அல்லது நோய் கொண்ட காலத்திலும் ஏறக்குறைய உடம்பில் உள்ளதேயாகும். ஆனல் நோயின் பரீட்சையோ, வைத்தியனுக்கு நோயின் முழுகுணத்தையும் அறிவதற்கான வசதிகளைக் கொடுக்கும். ஆகவே, உடம்பிலுள்ள வாத பித்த சிலேட்டும் கோளாறுகள் மூலியமாய் நோயின் தன்மை, அளவு, கடுமை முதலியவற்றை ஒருவாறு நிதானமாய் அறியலாம்.

நாடி நடையின் இலக்கணம் :-

தேகத்திடைத்தேயுள்ள எல்லா உறுப்புகளிலும் சிறந்தது இருதயம். இதன் மூலமாகத்தான் தாதுக்கள் யாவும் போஷிக்கப்படுகின்றன. இதுவே தேகம் நன்னிலையிலிருப்பதற்கும் சுகமில்லாமைக்கும் காரணம். இதன் தொழில் வேறுபாடுகளை நாடிகள் உணர்த்தும். சபத தாதுக்களும், இருதயம், நாடி, நரம்பு, ரத்தக் குழாய் முதலியவை ஒன்றோடொன்று தொடர்புள்ளவை.

இருதயத்தின் இடது சடரம் (Left Ventricle) குவியும் போது இரத்தம் கண்டரையின் வழியாகச் சென்று சகல நாடிகளுக்கும் பரவும். அப்போது நாடிகள் விரியும்; மறுபடியும் இடது சடரம் விரியும் போது நாடி நரம்பு இரத்தக் குழாய்களிலிருக்கும் குருதியானது குறைந்து நாடிகள் சுருங்கும். இவ்விதமாக இருதயம், குவியவும் விரியவுமாக இருப்பதால் அதனுடன் சார்ந்த நாடி, நரம்பு, ரத்தக் குழாய்களுக்கும் விரிந்து சுருங்கும் தன்மையுண்டு இது நாடி நடை எனப்படும்.

நாடி நடையின் குணங்கள் இருதயத்தின் நடையை ஒத்திருக்க காரணம் :-

இருதயத்தினுடைய நடையின் (துடிப்பு) பேதாபேதங்களை நாடிகள் மூலம் நமக்கு அறிவிக்கின்றது. இருதயத்தினுடைய நடை தேக ஸ்திதிக்கு ஒத்திருக்கும். தேகத்தில் நோய் கண்டால் இருதயத்தின்சுபாவமான நடை இழந்துபோகும். தேகத்திலிருக்கும் நோயை இருதயம் தெரிந்து கொண்டு நாடிகள் மூலமாக நமக்கு அறிவிக்கின்றது.

நாடி நடையைப் பரீட்சிக்கக்கூடிய இடங்கள் :-

மானிடர்க்கு ஏற்பட்ட எழுபத்திராயிரம் நாடி நரம்பு இரத்தக் குழாய்களிலும் நாடி நடைபெறும் நாடியை கணிப்பதற்குப் பத்து ஸ்தானங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக கைகளிலும் கன்னச் சுழிகளிலும், மர்ம ஸ்தானத்திலும் கணுக்காள்களின் உட்புறத்திலும் கால் பெருவிரலின் மேல்பாகத்திலும் நாடி நடையை பரீட்சிக்கலாமெனவும். அவற்றில் முக்கியமாக கை நாடியே சிறந்ததெனப் பிரமமுனி கூறியுள்ளார்.

திருமூலர் வாக்கின் பிரகாரம் குதிங்காலினுட் புறம், மர்மஸ்தானம்; உந்தி, மார்பு, காது, மூக்கு, கண்டம் (கழுத்து), கரம், புருவம், உச்சி முதலிய பத்து இடங்களில் நாடியைப் பரீட்சிக்கலாமெனவும், கூறப்பட்டிருக்கின்றன. எல்லாச் சித்தர்களும், கை நாடிப் பரீட்சையையே பிணிகளை கணிப்பதற்குச் சிறந்ததெனக் கூறியுள்ளார்.

நாடி பார்ப்பதற்கு கரத்தின் நாடியே சிறந்தது :-

கையில் ஆரை என்பின் மேலோடும் நாடி நரம்பு இரத்தக் குழாயானது மணிக்கட்டு பரியந்தம் சிறுத்து மேல புறமாகவும்,(superficial) துலக்கமாகவும்

இருப்பதால் மூன்று விரல்களால், வளி, அழல், ஐயமாகிய நாடி நடையை எளிதில் அறியலாம். மற்றயிடங்களில் இரத்தக் குழாய்கள் இதைப்போலல்லாது பருத்திருப்பதால் deep seated எளிதில் நாடி நடை அறியக்கூடா.

வாத பித்த கப தோடங்களின் நிலை :-

அபானன் முதல் உந்தி வரை வாதநிலை, உந்தியின் மேல் மார்பு வரை பித்தநிலை; மார்பு முதல் உச்சிவரை ஐயநிலை என அறியவும். வாதம் மலத்திலும், பித்தம் சிறுநீரிலும், கபம் விந்துவிலும் அடங்கும்

வாத பித்த கப உடல்நிறம் :-

1. வாத நோயாளர்க்கு உடல் கறுப்பாயிருக்கும்.
2. பித்த நோயாளர்க்கு உடல் பசுமஞ்சளாகவும், சிவப்பாகவுமிருக்கும்.
3. கப நோயாளர்களுக்கு உடல் நிறம் கலப்புற்ற குற்றங்கள் அளவாகக் கலந்திருக்கும்.
4. சந்நி நோயாளர்களுக்கு உடல் பல நிறமாக இருக்கும்
5. கப நோயாளர்க்கு உடல் வெண்மையாக இருக்கும்.

மூவகை நாடிகளை அறியும் முறை :

வைத்தியன் ரோகியின் வலது முழங்கையைத் தனது இடது கையால் முதலில் செவ்வையாகப் பிடித்துத் தனது வலது கையால் ரோகியின் வலது உள்ளங்கையை கோர்த்துப் பிடித்து நெட்டை வாங்கி அனல் பறக்கத் தேய்த்து, அப்பால் வைத்தியனின் இடது கைவிரல்களால் ரோகியின் பெருவிரல் பக்கமாக ஆரை என்பின் மேலோடுமு நாடி நரம்பு இரத்தக் குழாயின் மேல் மணிக்கட்டுக்கு ஒரு அங்குலம் தள்ளி மேலாக மூன்று விரல்களால் சமமாக மெல்லென அழுத்தியும், தளர்த்தியும், ஆராய்ந்த பின்பு விரல்களை மாறி, மாறி கூர்ந்து கவனித்து நாடியின் கதியை ஆராய்ந்து பார்த்து நோயின் தன்மையை அறிதல் வேண்டும்.

ரோகியின் இடது கைக்கு வைத்தியனின் வலது கையை உபயோகித்து நாடியை ஆராய்தல் உத்தமம். மூவிரல்களால் நாடி நடையை ஆராயும்போது ஆட்காட்டிவிரலிலுணர்ந்தது வாதம் எனவும் நடுவிரலிலுணர்ந்தது பித்தமெனவும், பௌத்திர விரலிலுணர்ந்தது ஐயமெனவும் உணர்தல் வேண்டும்.

இவற்றுள் வாதம் அதிகமானால், அதற்குரிய நோய்களையும், பித்தம் அதிகமானால் அதற்குரிய பிணிகளையும் உண்டாக்கும். அன்றியும் பெருவிரலும், சிறு விரலும் உணர்த்தும் நாடியானது பூத நாடியாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இதனையும் சேர்த்து நாடிகள் ஐந்து எனவும், அவை ''பஞ்ச நாடி'' அல்லது ''பஞ்ச பூத நாடி'' எனவும் வழங்குவர்.

நாடி நடையை ஆராயுங் கிரமும், முக்குற்றங்களையும், பஞ்சநாடிகளையும் குறிக்கும் விரல்களையும், நாடி என்பது ஒரே நாடி நரம்பு, இரத்தக் குழாயின்மேல் விரல்களால், அழுத்தியும், தளர்த்தியும் பார்க்கும்போது ஏற்படும் துடிப்பு ஆகும். ஆண், பெண் இவர்களுக்கு முறையே, வலது இடது கை நாடியைப் பார்க்கும் முறை :-

எல்லோருக்கும், வலது, இடது கைகளில் நாடியை ஆராயலாமெனினும், புருடர்க்கு வலது கையிலும், பெண்களுக்கு இடது கரத்திலும் பேடியாக இருந்தால் அவனது குறியை அனுசரித்து வலது அல்லது இடது கை நாடிகளை ஆராய்ந்து சாத்தியகிரமமென்பர்.

குறியடையாள நாடி :-

மூவகை நாடி நடையின் மாத்திரையளவைக் கணிதத் சித்தர்கள் தங்கள் நூல்களில் நாடி நடையின் அளவை அங்காங்கு சிவசெந்துகளின் நடையின் கால அளவுக்கு உபமானமாக கூறுவதை குறியடையாள நாடி என்பர்.

வாதத்தின் நடையை, மயில், அன்னம், கோழி, ஓணான், குயில், கொக்கு முதலியவற்றின் நடைக்கு ஒப்பிடப்பட்டிருக்குகிறது. அவைகள் கால்களை சுபாவமாக உயர்த்தி மறுபடியும் கீழே வைக்கும் காலயளவை ஒரு மாத்திரைக்குரிய அளவாகக் கருதவேண்டும்.

பித்தத்தின் நடை, ஆமை, அட்டை ஆகியவற்றின் நடைக்கு உபமானமாகக் கூறப்பட்டுள்ளது. இவைகள் நகர்ந்து செல்லக் கூடியவை. ஆதலால் ஒன்றுக்கொன்று பொருத்தமாகும். இதற்கு மாத்திரையளவு அரை எனக் கூறியுள்ளார்.

சிலேத்துமத்தைக் கூறியவிடங்களில், தவளை பாம்பு இவற்றை உபமானமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவைகள் முறையே குதித்தல், சீறல் என்னும் செய்கையுடையனவாதலால் பொருத்தமாகும். இதற்கு மாத்திரையளவு கூறின் காலாகும்.

நாடி ஆராய்ச்சியில் முக்கிய கவனிப்பு :

முத்தோடங்களில் நாடி நடையை ஒழுங்காக கற்றுணர்தல் அவசியம். காலம், தேசம், வயது, வன்மை முதலியவற்றை ஒரு முறைக்கு. இரு முறை வெவ்வேறு காலங்களில் நாடி நடையின் தன்மையைச் சிரத்தையுடன் பகுத்துணர்தல் வேண்டும். நாடி நடையை பழகுவோன் அறிவைச் சிதறவிடாமல், மனதை ஓர்மையுடன் திடப்படுத்திக் கூர்ந்து கவனிப்பதுமன்றி, தேசம், காலம், வயது வன்மை இவற்றிற்குத் தக்கபடி முக்குற்றங்களின் வன்மை, மென்மைகளையும், தன்நடை, புறநடை, கிளைத்தல், கதித்தல், குதித்தல், துள்ளல், அமுந்தல, படுத்தல், கலத்தல் முன்னோரக்கு, பின்னோக்கு, பக்கம் நோக்கு, சுழலில், முதலிய நாடி நடைகளின் விசேடக் குறிகளையும் அறியலாம்.

எண்வகைத் தேர்வுகளில் நாடியின் கணிப்புப் பிரதானமாகக் காணப்படுவதற்கான காரணம் :-

1. நாடியை எண்வகைத் தேர்வுகளில் சேர்த்துக் கூறிய நூல்களிலிருப்பது போல் எண்வகைத் தேர்வுகளில் நாடியைச் சேர்க்காமல், சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், மலம், நீர், எச்சில், என்பதான எண்வகைத் தேர்வுகளாக அமைத்துக் கொண்டு, நாடியைத் தனிச் சிறப்பாகவும், முதன்மையாகவும் தனிப்பெரும் நாடி நூலாகச் சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

2. பிணிகளைக் கவனிப்பதற்கு எண்வகைத் தேர்வுகளும் நாடியுட்பட அவசியமே.

3. நாடி, கணிப்பில் தேர்ச்சி பெற்ற மருத்துவன் பிணியாளன் அல்லது சுற்றத்தாரின் உதவியின்றி, பிணியாளனின் நாடியைக் கொண்டே பிணியை ஒருவாறு அறியலாம். ஞாபகமற்ற நிலையிலோ, ஊமையும், செவிடுமாயுள்ள பிணியாளரின் நிலைமையை அறிவதற்கு நாடிகணிப்பு பெரிதும் பயன்படும்.

4. நாடி நடையின் பேதாபேதங்கள் நன்றாகத் தெரியாவிட்டால் தேகத்திலிருக்கும் பிணியின் கூறு செவ்வையாகத் தோன்றாவாம்.

5. ''நோய் நாடி நோய் முதனாடி யது தணிக்கும்,
வாய் நாடி வாய்ப்பச் செயல்''

உணவாதி செயல்கால் உண்டாகும் நோயினை அறியும் பொருட்டு, நோய் அறிதற்கான நாடல் வழீ நாடி எனவும், உணவு செயல் களால் வளி, அழல், கபம் ஆகிய மூன்றினால் ஏற்படும் குற்றம் அதை தணிப்பதற்கு வழி முறைகள் நாடுவதே மருத்துவனின் கடமையாகும். ஆகவே நாடியைக் கொண்டே பிணிகளைக் கணிக்கலாம் என்பதை இதன்மூலம் அறியலாம்.

6. நாடிப்பரீட்சையால் காணும் தேகப்பிணி அல்லது உடலில் தாக்கும் குறி கணங்களை சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், மலம், சிறுநீர், எச்சில், வியர்வை, சுக்கிலம், மெய், செவி, கண், நா, மூக்கு ஆகிய இவற்றின் ஆராய்ச்சியைக் கொண்டும் பிணியாளனின் சரித்திரத்தைக் கொண்டும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆயினும் மருத்துவம் என்னும் சிகிச்சை அல்லது பரிகாரம் புரிய ஆரம்பிக்கும்போது நாடியின் குறிப்பைக் கொண்டு அதற்குத் தக்கவாறு மருத்துவம் புரிவதே மேலான முறை என்பதாகும். முக்குற்றங்களில் எக்குற்றம், பிரதானமாகப் பிணிக்கப்பட்டு, நோயாளி துன்புறுகிறானோ, அதற்கேற்ற மருந்துகளைக் கொடுத்து முதன்மையாக்க கேடடைந்த குற்றம் தணிக்கப்படுமானால், அதுவே நோய் குணமாகும் கிரமத்திற்கு ஏற்றவழி எனவும் பின்னிட்ட துணை வியாதிகளும் கிளைக்கது என்பதற்கும் உறுதி கூற இடமுண்டு.

நாடி நடைமாத்திரையின் இலக்கணம் :-

ஒரு மாத்திரை என்பது ஒரு கை நொடி அல்லது கண் இமை சிமிட்டலின் (மூடித்திறக்குதல்) கால அளவைக் குறிக்குமெனச் சிலரது அப்பிராயம். ஆனால் மருத்துவ நூல்களை ஆராயும்போது மாத்திரை என்றால் நாடியின் துடிப்பு ஒரு கோதுமையரிசிப் பிரமாணம் எழுந்து அடங்குவதற்குரிய கால அளவாகும்.

வளி அழல், கபம் மூன்றும், தத்தம், நிலையில் மிகுதல், மீறி நடத்தல், கதித்தல், தோடத்தில் தோடம் இவை போன்ற சொற்கள் யாவும் ஒன்றே.

வாதநாடி இருக்க வேண்டிய மாத்திரையளவிற்கு இரண்டு பங்கிருந்தல் வாதமிகுதி, வாதம் கசித்தல், வாதத்தி வாதம் என்னும் பதங்களல் வழங்கப்படும்.

பித்தநாடி நடை தன்மாத்திரையளவில் இரண்டு பங்கு இருக்குமானால், பித்தமிகுதி, பித்தம் கதித்தல், பித்தம் மீறி நடத்தல், பித்தத்தில் பித்தம் என்னும் சொற்களால் வழங்கப்படும்.

கபநாடி நடை தன் மாத்திரையளவில் இரண்டு பங்கு இருக்குமாகில் கபமிகுதி, கபம் கதித்தல், கபம் மீறி நடத்தல், கபத்தில் கபம் என்னும் சொற்களால் வழங்கப்படும்.

தொந்த நாடிகளின் மாத்திரை விகிதம் :

1. வாத பித்த தொந்தம் : (வளி, அழல், கலப்பு) வாதநாடி தன்னளவில், இரண்டு மாத்திரையும், பித்தநாடி தன்னளவாகிய அரை மாத்திரைக்கு மேலும் அதற்கு இரட்டிப்பாகிய அரைமாத்திரைக்குள்ளடங்கியும் நடைபெறும்.

2. வாத கப தொந்தம் : (வளி கப கலப்பு) வாதநாடி தன்னளவில் இரண்டு மாத்திரையும் கப நாடி தன் அளவாகிய கால் மாத்திரைக்கு மேலும் அதற்கு இரட்டிப்பாகிய அரை மாத்திரைக்குள்ளடங்கியும் நடைபெறும்.

3. பித்தவாத தொந்தம் : (அழல், வளி, கலப்பு) பித்த நாடி தன்னளவில் இரண்டு பங்கு அல்லது தன் இயற்கை மாத்திரையின் இரட்டிப்பாகிய

ஒரு மாத்திரையையும் வாதநாடி தன்னளவில் ஒரு மாத்தரைக்கு மேலும் இரண்டு மாத்தரைக்குள்ளடங்கியும் நடைபெறும் என்பதாகும்.

4. பித்த கப தொந்தம் (அழலையக்கலப்பு) :

பித்தநாடி தன் அளவில் இரண்டு பங்கு அல்லது தன் இயற்கைமாத்திரையின் இரட்டிப்பாகிய ஒரு மாத்தரையும் கபநாடி தன்னளவாகிய கால்மாத்திரைக்கு மேலும், அதன் இரட்டிப்பாகிய அரைமாத்திரைக் குள்ளடங்கியும் நடைபெறும் என்பதாகும்.

5. கப வாத தொந்தம் (கப வளிக் கலப்பு) கப நாடி தன் அளவில் இரண்டு பங்கு அல்லது அதன் இரட்டிப்பான மாத்திரைக்கு மேலும் இரண்டு மாத்திரைக்கு உள்ளடங்கியும் நடைபெறும்.

6. கபித்த தொந்தம் :- (கப ழளிக் கலப்பு)

கப நாடி தன்னளவில் இரண்டு பங்கு அல்லது அதன் இரட்டிப்பான மாத்திரையாகிய, அரைமாத்திரையும், பித்தம் தன்னளவாகிய அரைமாத்திரைக்கு மேலும், அதன் இரட்டிப்பாகிய ஒரு மாத்திரைக்குள்ளடங்கியும் நடக்குமென்பதாகும்.

பிணியை நாடியாலறிந்து ஊடுமருந்தை சிறந்ததெனல் :-

வாத பித்த கப நாடிகளின் தன்மை, பிரிவு, மிகுதி, குறைவு, தொந்தம், சன்னிவாதம், மாறி மாறி வரும் கலநிலைகள் ஆகிய இவற்றாலேற்படும் பிணிகளை அறிந்து மருத்துவம் செய்தல் சிறந்த முறையாகும். நாடிகளைக் கொண்டு பிணிகளின் நேர்மையறிந்து பரிகாரம் புரிவது அவசியமென்பதையும் அறியலாம்.

நாடி நடையளவைப் பற்றிய உபாயம் :-

வாத, பித்த, கப நாடிகளின் தன்மைகள், குறிப்பாக அவற்றின் அளவை அறிய வேண்டின், மூன்று நாடிகளில் நடுவிரல் நாடி தராசு முனைக்குச் சமானமாக மத்தியமாக வைத்து, மற்ற இரு விரல்களின் தன்மையைக் கணக்கிடல் கிரமமென்பதே இதன் பொருளாகும்.

நாடிகணியப்பால் நோய் தணியுறு கிரமம் அறிய உபாயம் :

மூன்று நாடிகளில் எது அதிகக் குற்றமடைந்திருக்கிறதோ அதனை அவசரமாகவும், அவசியமாகவும் எண்ணி முதலில் அதற்கேற்ற மருந்துகளை கொடுக்க, அந்த மிகுந்த தோடம் நீங்க மாரக்கமாகும். வியாதியை பரிகரிப்பதற்கு அல்லது தணிப்பதற்கு இது தந்திரமும் சுலபமான உபாயமென்பதுமன்றி பிற குணங்களாகிய துணை நோய்கள் எவையும் தொடாராது என்பதை தெரியவும் நோயை நன்கு ஆராய்ந்து அறிந்து மருந்து கொடுத்தல் இன்றியமையாதது.

ஒரு பண்டிதனுக்கு எவ்வளவோ பெருமை வாய்ந்த பரிகாரங்கள் (மருந்து வகைகள்) தெரிந்திருந்த போதிலும், நாடியை பிரதானமாகக் கொண்ட எண்வகைத் தேர்வு, மற்றுமுள்ள குறிகுணங்கள், நோயின் சரித்திரம் முதலியவற்றால், நோயின் தன்மைகளை தீர்க்கமக அறியானாயின், பண்டிதனது மருந்துகள் பயனற்றதாகி விடுமென்பது திண்மை.

''பஞ்சநாடி'' அல்லது பஞ்சபூதநாடி :

பஞ்சநாடி அல்லது ''பஞ்சபூத நாடி'' என்பது பெருவிரலில் உணர்த்தும் துடிப்பு பூதநாடி; ஆள்காட்டி விரலிலுணர்த்தும் துடிப்பு வாதம்; நடுவிரலில் துடிப்பு பித்தம், அணிவிரல் துடிப்பு சிலேத்துமம்; சிறுவிரல் துடிப்பு பூதநாடி என்னும் ஐந்து நாடிகளை ஐந்து விரல்களிலும் அறியலாம்.

குருநாடி : குருநாடி என்பது சீவநாடி அல்லது உயிர்த்தாதுவையே. குறிக்கும். வாத பித்த சேத்துமமென்ற மூன்று நாடிகளில் பித்த நாடியானது ''பூதநாடி'', ''குருநாடி'', ''ஆத்ம நாடி'', யென வழங்கும் எனவும் சகல நோய்களையுமகற்றி நன்மை பயக்கும் நாடி எனவும், அகங்காரம், பிராணன், உயிரக்கினி இவை எல்லாவற்றிற்கும் குருநாடியே ஆதாரமாயுள்ளது.

குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னே நிற்கும் என்ற கருத்திற்கிணங்க, பித்தநாடியே குரு நாடியாகவும், ஆத்ம நாடியாகவும், சீவ நாடியாகவும் நிகழலாமென கூறுகின்றனர்.

குருநாடியை தனி நாடியாக எண்ணினாலும் சரி அல்லது வாதம் பித்த கபம் ஏற்படுவதற்கு எது ஆதி காரணமோ, இவ்விரண்டையும் ஒன்றாகவே பாவிக்க வேண்டும். ஏனெனில் குரு நாடி வாத பித்த கப நாடிகளுக்கு வலுவைக் கொடுத்து, அவற்றின் இயற்கை நடைகளெல்லாம் குருநாடியின் தத்துவத்தால் நடைபெறுகின்றன.

வாத பித்த கபம் நடைபெற்றுக் கெண்டிருக்கிற தருணத்தில் குரு நாடியை தனித்து அறிவது சாமான்ய மன்று, மூன்று நாடிகளும் ஒருங்குங் காலத்து குருநாடி நடையை உற்று கவனித்தால் பித்தத்தின் முன்னே புலனாகக் கூடும்.

குரு நாடியானது பஞ்ச நாடிகளிலும் கலந்து நின்று அவற்றை வளர்த்து, வலுப்படுத்தி நடைபெறச் செய்கிறதென்பதை பஞ்ச நாடிகளிருப்பிடம் கூறுகிறார்.

குருநாடி வாத பித்த கபம் நாடிகளின் மத்தியில் தமரகம் போன்றது எனவும் விளங்குகிறது. தமரகம் என்னும் இருதயம் உடற்கு எவ்வளவு பிரதானமோ அதே போல குரு நாடியானது வாத பித்த கபமாகிய உயித்தாதுவுக்குப் பிரதானமாகும். இதனை வேறுபடுத்திக் காண்பது அறிது.

குருநாடி தச நாடியில் இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று நாடிகளும், அபானன், பிராணன், சமானன் என்ற வாயுக்களின் இயக்கத்தால் சுவாசத்தையுண்டாக்கி. அதனின்றும் வாத பித்த கபம் என்னும் மூன்று நாடிகளும் உண்டாகி, உடலையும் உயிரையும் பொருத்தி நன்னிலையில் வைத்துக் காப்பாற்றி வரக்கூடிய தத்துவத்திற்குக் காரணமான சக்தி எதுவோ அதுவோ குருநாடி எனக் கொள்ளலாம்.

குருநாடியின் தன்மையால் நோய்களைக் குறிக்கும் குணம் :

1. குருநாடி வாதத்தில் அட்டைபோற் புரண்வெரிய வாய்வு மிகும் இருமல் சொறி, திணவு, இவை மிகுதியாயுண்டாகும்.
2. குருநாடி பித்தத்தில் அன்னம்போல் நாக்கில் சரங்காயும், வாய்நீர் சுழற்றும்; வியர்க்கும் நீருக் கட்டுப்படும், கை காலோயும் என்பனவாம்.
3. குருநாடி சிலேத்துமத்தில் சிங்கம் போல் சீறி நிற்கில சந்நி தோன்றும்.
4. குருநாடி சிலேத்துமத்தை ஊடுருவிவருமாகில் (அதாவது, வாதம், பித்தம், இவ்விரண்டும் ஒடுங்கி கபம் மட்டிலும் தனித்துகதிந்து நின்றால் அசாத்திய மரணக் குறிகளுண்டாகும்.

5. குருநாடி மொத்தத்தில் குன்றிப் போகில் வயிறு கழியும், கடுப்பெடுக்கும் கைகால் வீங்கும்.

6. குருநாடி பக்கம் பாயில் (அதாவது) அதன் இயற்கை இருப்பிடமாகிய பித்தத்தின் முன்னே நிற்பதற்குப் பதிலாகப் பக்கத்தில் தோன்றினால்) சிலேத்துமம் எதிரே மோதும் (அதாவது சிலேத்துமம் அதிகரிக்கும்)

7. குருநாடி நேரே நிற்கில் வாத பித்த, கபம் மூன்றும் சேரும் (அதாவது மூன்று நாடிகளும் தன்னிலைப்படும்).

8. குருநாடி பின் வாங்கில் அசாத்தியங்களுண்டாகும். (அதாவது குருநாடி இயற்கையளவாய் நடைபெறாவிட்டால் அசாத்தியங்களுண்டாகும்.

9. குருநாடி கபத்தில் விட்டிலைப்போல் துடிக்கில் மரணமாம்.

நோய் நிவர்த்தி :-

ஒரு நோயாளியை குணப்படுத்துவதற்காக, தாது, தாவர மருந்துகள் இரண்டையும் கலந்தும், அல்லது பூரணமாக சொஸ்தப்படும்படி தனிப்பட எட்டு விதமாகவும் தயாரிப்பதுண்டு. ஆனல், மனிதன் அவயவங்களையும், பூண்டுகளையும் தாக்குவதற்கு ஆகாயத்தில் அனேக நட்சத்திரங்கள் இருக்கின்றன. ஆகவே, கீழே பூமியிலுள்ள பூண்டுகள் அவற்றிற்குள்ள சம்பந்தத்தினல் நட்சத்திரங்களின் சக்தியை கிரகித்துக் கொள்ளும், இப்படிப்பட்ட பூண்டுகளைத்தான் வைத்தியன் ஒரு நோயை குணப்படுத்துவதற்கு விவேகத்தோடு உபயோகிப்பதினல் நன்மை உண்டாகும்படி செய்யலாம் மேலும், உபயோகப்படுத்துபவனின் பழக்க வழக்கங்களினல் ஏற்பட்ட கோளாறுகளும் சீர்திருத்தமாகி, உடம்பு பழயபடி ஆரோக்கிய நிலையை அடையும். நோயை குணப்படுத்தும் முறையில் கிரகக் கோளாறுகளே முக்கியமான காரணமாதால் நவக்கிரக பூசை மிக்க அவசியமானது.

சித்த முறைப்படி வியாதிகள் 4148 என்று கொள்ளப்படும். இம்முறையினல் குணப்படாதது ஒரு நோய்கூட கிடையாது.

பத்தியக் கிரமம் :-

சித்த முறையில் பத்தியமுறை விஷயம் மிகவும் முக்கியமானது. உனக்கு இஷ்டமானதை சாப்பிடலாம் என்று சொல்வதுதான் இதில் கிடையாது. ஏனெனில், பத்திய முறையைக் காப்பாற்றுவதால் தான் வியாதிகளை எளிதில் குணப்படுத்தக் கூடும். நாம் சாப்பிடும் உணவினல் தான் முக்கியமாக முப்பிணிக் கோளாறுகள் ஏற்படுகிறது. ஆகையினல், பத்திய பாகம் ஒவ்வொரு வியாதிக்கு தக்கபடி அனுசரிப்பது மிகவும் முக்கியமான விஷயமாகும். இதற்காக வேண்டிய பதார்த்த குண விளக்கத்தில் உடம்பின் தோஷக் கோளாறுகளைப் பற்றியும், அதற்குத் தகுந்தபடி நோய்களை சிகிச்சை செய்ய வேண்டியும். இன்னின்ன மருந்துகளென்ற விவரத்தையும் சொல்லப்பட்டிருக்கிறது. இது விஷயத்தில் பூர்வகாலத்து சித்தர்கள் அனுபவத்தை நாம் கைக்கொண்டு அவர்கள் கவனத்துடன் முடித்த பரிசீலனைக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். ஆனல், தற்காலத்தில் சிகிச்சை செய்வோர்கள் இதை கவனிப்பதே கிடையாது. நாம் புசித்து பசிதாகத்தை தீர்த்து கல கலப்பாய் இருப்பதற்காக வேண்டி எவ்வளவு உணவு புசிக்க வேண்டுமோ அவ்வளவுதான் கொள்ள வேண்டும். சித்தர் சிகிச்சை

முறையில் பத்தியத் தவறுதல்கள் ஏற்பட்டால் வியாதியுடன் பல கோளாறுகளும் ஏற்படும். ஆகவே, இது விஷயத்தில் மெத்த சாக்கிரதையாய் இருக்க வேண்டுமென்பதை நோயாளிக்கு வைத்தியன் முன்னதாகவே எச்சரிக்க வேண்டும். ஏனெனில், பத்தியம் காத்தலினல் பாதிநோய் குணப்படுமென்பதை மறக்கக் கூடாது.

சித்த முறைப்படி தயாரிக்கும் மருந்துகள் :-

சித்த வைத்திய முறைப்படி 212 வகையான தாதுப்பொருள்களினின்று மருந்துகள் தயாரிக்கப்படும் இதற்கெல்லாம் மூலப்பொருள்களாகிய உப்பும், இரச, கந்த, பாஷாணங்களையும் ஆதாரமாகக் கெண்டு தாதுவகைகளையும், உலோகப் பொருள்களையும் மாற்றி மருந்துகளாக தயாரிக்க வேண்டும். ஆகவே, நோய்களை சிகிச்சை செய்யும் பொருட்டு மேற்கண்ட தாது வர்க்கங்களை புடமிட்டு பற்பம், செந்தூரம், சுண்ணமாக செய்து கொடுக்கவேண்டும். இதற்கு கட்டுமுறை தெரியவேண்டியது அவசியம். இவ்வகையாக கட்டின பிறகுதான் பற்பம், செந்தூரம், சுண்ணமாக மாற்றி அனேக நோய்களுக்கு மருந்துகளாக கொடுக்கலாம். ஆனல், இவ்விதமாக மாற்று முறையில் மூலிகைச் சரக்குகளை நாம் செய்ய வேண்டிய மருந்திற்கு தக்கபடியும், அதன் குணத்திற்கு தக்கபடியும், உபயோகமாகும்படி சேர்க்க வேண்டியதாயிருக்கும். இதன்றியும், வைத்தியர்கள் மூலிகைகளின் வேர்கள், சத்துக்கள், சாறுகள், விதைகள், மரத்தின் பால், பிசின் ஆகிய இவைகளைக் கொண்டு சூரணம், இலேகியம் இவைகளையும் இம்முறைப்படி தயாரித்து கொடுத்துள்ளார்கள்.

பூர்வ காலத்து மருந்துகள் தூண்களை போல் நான்கு வகை ஆதாரமாக கொண்டது அவையாவன - (1) அவைகளின், இயற்கையான தன்மையை அறியும் அறிவு,(2) தன்னுடைய மனே வல்லமை, (3) தனக்கு ஏற்பட்ட தெய்வீக சக்தி, (4) வைத்தியனின் நல்லொழுக்கம், பயபக்தியாம். மேலும், இம்முறைப்படி, மருந்துகள் மூன்று வகைகள், அவையாவன - (1) ஒப்புறை, அதாவது வியாதிக்கு சமத்துவ குணமுடைய மருந்துகள், (2) எதிருறை-நோய்க்கு எதிரான குணத்தை அதாவது கண்டிக்கக் கூடிய குணத்தையுடைய மருந்துகள், (3) கலப்புறை அதாவது மேற் சொன்ன இரண்டு வித மருந்துகளும் கலந்தது.

இதன்றி, சித்த முறைப்படி, காய சித்திக்காக சரக்கு வைப்பை அனுசரித்து மருந்துகள் தயாரிக்கப்படும். இவ்வகையான மருந்துகள் வேறு வைத்திய முறைகளில் காணமுடியாது. இம் மருந்துகள் நீண்ட ஆயுள்வரை இருப்பதற்கும் மரணத்தை தடுப்பதற்காகவும் வேண்டி தயாரிப்பது. இதற்காக வேண்டி இரசத்திலிருக்கும் தன்மையையும், உள்ளிருக்கும் சக்தியையும் மாற்றி, நெருப்புக்கு ஓடாதபடி செய்து பின்பு உலோகங்களைப் போல் உருகியாடவும் செய்து, சுண்ணமாக உருவகப்படுத்தி சாப்பிடும் படியான முறையில் உட்கொண்டால் உடம்பில் சதை பாகங்களிலும், சாலம் அல்லது கண்ணறைகளிலும் புகுவதினல் உடம்பு கிரகித்துக் கொள்ளும். ஆனல், இது மிகவும் இரகசியமான முறை சாதாரணமாக செய்து முடிப்பது இக்காலத்தில் அசாத்தியமான காரியம்.

சித்தவைத்தியத்தைப் பற்றிய பொதுவான குறிப்பு விஷயங்கள் :-

மனிதன் சாதாரணமாக மனதினால் அதிகமாக தூண்டப்படுகிறான். ஏனெனில், ஆன்ம சக்தியானது மனதின் மூல சக்தியின் மூலியமாய் செயலியற்றுவதால் அதிக வல்லமையடைகிறது. பூர்வ காலத்தில் சித்தர்கள் நூற்களின் உண்மைகளை தங்கள் தியானத்தினால் கண்டறிந்து அனேக அற்புதங்களை மனோ வல்லமையினாலும், சக்தியாலும் செய் தார்கள்.

தென்னிந்தியா தட்சண பாகத்திய தமிழ் தேசமாகிய லிமூரியா என்ற பூர்வ பாகம் முழுவதும் சமுத்திரத்தில் மூழ்கி விட்டாலும், அதற்கு பிற்காலத்திய சனங்களின் உடம்பின் கூறுகளை நன்றாக கண்டறிந்த விஷயங்களினின்று ஏற்பட்டது தான் சித்த வைத்திய முறை. இந்நூற்களில் சொல்லியுள்ள மருந்துகள் இந்த ஊரிலேயே விளையும் மூலிகை, கிழங்கு, வேர், முதலியவைகளை அபரிமிதமாகக் கொண்டு, இவ்விடத்து சனங்கள் பழக்கமாக உண்ணும் உணவிற்கு தக்கபடியும், அவர்களின் தேகக் கூறுக்கு அமைந்தவாறுமாக கூறப்பட்டிருக்கிறது.

மேனாட்டு மருந்துகள் இந்திய பழக்கவழக்கங்களுக்கும், இத் தேசத்து சீதோஷண நிலைக்கும் எவ்விதத்திலும் பொருந்தவே பொருந்தாது. உதாரணமாக, அவ்விடத்திய அரிஷ்ட மருந்து, சாராயம் சேர்ந்த மருந்து இவைகளை உட்கொள்ள உடம்பின் ஈரல், குண்டிக்காய் உறுப்புகளுக்கு ஒவ்வாது, அதனால் அனேக நோய்களுண்டாகும். தென் இந்தியாவிலுள்ள அனேக கோடி சனங்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாக நம் முறையினால் காப்பாற்றப்பட்டு வந்தார்கள். மேனாட்டு முறை பதிதாக வந்து சேர்ந்திருந்தாலும், இப்பொழுதும் கிராம சமுதாயங்களிலுள்ள, சனங்கள் பழய சித்த முறைப்படி தான் ஆதரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இச் சித்த முறை, தற்காலத்தில் ஆதரவற்று ஆராய்ச்சி யில்லாமலே சீரிழந்து வருகிறது. மேலும், பிரிட்டிஷ் இராசாங்கம் பாஷாணச் சட்டம் என்பதை ஏற்படுத்திய நிமித்தமாக, சித்த முறைப்படி பூர்வகாலத்திலிருந்து, மருந்துகள் தயாரிக்கப்பட்டு வந்த மைசூர், தஞ்சாவூர், விஜயவாடா ஆந்திராதேசம், முதலிய இடங்களில் உள்ள மருந்துச் சாலைகளெல்லாம் மூடப்பட்டன.

மேலும், சித்த நூற்களில் உபயோகப்படும்படி சொல்லியுள்ள அனேக விஷயங்கள் தற்காலத்தில் அச்சுப் பதிப்பிற் காணுதற்கில்லை. ஆகவே, சித்த நூற்கள் முழுமையுமே ஆராய்ச்சி செய்து அதிலுள்ள நுன்முறைக்குத் தகுதியானதை பிரித்தெடுத்துக்கூற வேண்டியிருக்கிறது. தற்காலத்து அபிவிருத்தியிலுள்ள இளைஞர்கள், இது விஷயத்தில் யாதொரு சிரத்தையும் எடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. ஏனெனில், அவர்கள் மேனாட்டு நாகரீகத்தினால் கட்டுண்டு,

அவ்வலையிற் சிக்கி உலக மாயையினால், நம்முடைய பூர்வீக நூற்களின் வித்தைகளையும், தேர்ச்சிகளையும் மிக்க வெறுப்புடன் காண்கிறார்கள்.

முதலாவதாக, நம்முடைய சித்த முறை அனேக ஆயிர வருஷ காலமாக சாதனைக்கு உரித்தாகயிருந்து வந்ததால், பூர்வ கரும வியாதிகளின் கொள்கையைத் தவிர, மற்றெவ்விதத்திலும் தற்காலத்திய மேனாட்டு சாஸ்திரிகள் அவைகளைத் தள்ளக் கூடாமையென நாம் கருதுகிறோம். ஏனெனில், பூர்வ கரும வியாதிகளின் கொள்கையோ அவர்கள் அறிவுக்கு எட்டாத விஷயம். மருந்துகள் தயாரிப்பதென்றால் தமிழ் வைத்திய நூற்களிற் சொல்லியுள்ள விதிகளை அனுசரிக்க வேண்டும். சாதாரணமாய் நமது முன்னோர்கள் அல்லது குருக்கள் மருந்து தயாரித்த முறையை நாமும் அனுசரித்து வருகிறோம். ஆகவே, ஒருவனின் தேர்ச்சியையும், மேன்மையையும் அவன் குருவின் வழியைப் பற்றி தெரிந்து கொள்ளலாம். சில வைத்திய முறைகளில், சில நோய்கள், பஞ்ச கருமம் என்னும் முறையால் குணப்படுத்தப்படுகிறது. ஆனால், இவ்வியாதிகளையே சித்தமுறையில் மேற்கண்ட பஞ்ச கரும முறையில்லாமலே உலோகங்களினின்று தயாரித்த பற்பம், செந்தூரம், சுண்ண வகைகளினால் குணப்படுத்தலாம்.

இரண்டாவதாக, சித்தர்கள் முறையில் அனேக கோட்பாடுகளுண்டு. அவைகளுக்கு ஒருங்கே ஒரு முடிவான சங்கதி வாக்குறுதியாக சொல்லிவிட முடியாது. இது விஷயத்தில் தற்காலத்து தேக தத்துவ நூலிலும் எதுவும் சொல்லப்படவில்லை. ஆகவே, சித்தமுறையில் சொல்லியுள்ள அனேக விஷயங்களை விசாரித்தறிந்து வெளிப்படுத்தவேண்டி இருக்கிறது. உயிர்த்தத்துவமடங்கிய சீவாதார நூலைப்பற்றி அனேக விஷயங்கள் சரிவர இன்னும் தெரிந்துக் கொள்ள முடியவில்லை. ஒருவனுக்கு வம்ச பரம்பரையாய் ஏற்படும் குணாதிசயங்களைப் பற்றியும், கருவில் இருக்கும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்பதைப் பற்றியும் இதுவரையிலும் நாம் அறிந்தோமில்லை. தற்காலத்து நிபுணரான சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் சொல்லும் கோட்பாடுகள் ஆச்சரியத்தை விளைவிக்கிறது. மேனாட்டு முறைப்படி தற்காலத்தில் புதிதாக கண்டு பிடித்ததாக சொல்லப்படும் ஆர்மோன் என்னும் விஷயம், நமது திரிதோஷக் கொள்கைக்கு ஒருவாறு சமமாகச் சொல்லப்பட்டதா ? ஓர்வகை முடிவிற்கு வருவதற்கு ஏதுவாக விஷயங்களை தகுந்தபடி விசாரனை செய்யாமல், ஒருவர் கொள்கையைத் தப்பென்று வெளிப்படையாய்ச் சொல்வது சாஸ்திர கொள்கைக்கு பொருத்தமான தல்ல. சாஸ்திர விஷயமாக நாம் கொண்ட விரோதமான கருத்தை கூறுவதற்கு முன் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் அனேகம் இருக்கிறதென்பதையும், சாஸ்திர அபிவிருத்தி இதுவரையிலும், சமுத்திரக் கரையில் கூழாங்கற்களை பொருக்குவதைப்போல் அவ்வளவு மெதுவாக இருந்து வருகிறதென்பதையும் நாம் மறந்து விடுகிறோம். உடற் தத்துவ இரசாயன நூலின் விஷயத்திலோ, சித்தமுறையிலுள்ள இரசாயன தத்துவ முறையோடு ஒத்து பார்க்குங்கால், நாம் குழந்தையைப் போல் ஆரம்ப முறையில் இருந்து வருகிறோம். எது சாதனைப் பழக்கத்துக்கு பொருத்தமானதோ அதுதான் சரியான முறை.

2. சித்தர் சோதிடம்

சித்தர்களால் செய்யப்பட்ட சோதிட நூற்கள். இவைகள் ஒவ்வொரு மனிதருடைய வாழ்நாளின் நிகழ்ச்சியைப் பற்றி கடியாரத்திற்கு சாவி கொடுத்து, பின்னுல் ஓடுவதற்கு தகுதியாக வைத்திருப்பதுபோல், முன்பதாகவே தயாராக எழுதிவைக்கப்பட்டிருப்பதாகும், வேண்டிய போது அவைகளை எடுத்து, ஒருவனின் வாழ்நாளில் நடக்கக் கூடிய முக்கியமான விஷயங்களை எடுத்துக் கூறுவதாகும். அந்த நூற்களில் கடிகை, லக்கினம் முதலிய விவரங்களோடு, ஒவ்வொருநாளும் நேரும் சங்கதிகளை குறிக்கப்பட்டிருக்கும். இது உண்மையில், ஒவ்வொருவரின் சாதகமே ஒழிய வேறல்ல. ஆகவே, அனேக வருஷங்களுக்குப் பின்னுல் சாதகன் இச் சாதகத்தை வந்து கேழ்க்கக் கூடும் என்ற கருத்துடன் சித்தர்கள் எழுதி முடித்தது. அவ்வப்பொழுது நடக்கவேண்டிய விஷயங்களைக் கிரமமாகவும், முறையாகவும், முன்னதாகவே சிலருக்கு எழுதி வைத்ததை நோக்குமிடத்து, மிகவும் மெச்சத் தகுந்ததாகவும், அவ்வளவு தெளிவான நடையை ஒருவரும் சரிவர விவரித்து சொல்லக் கூடாத முறையாகவும் இருக்கிறது. அன்றியும், ஒருவரும் பிழைகூற முடியாத வகையில், அவ்வளவு நேர்மையாகவும், உண்மையாகவும் எழுதப்பட்டு இருக்கிறது. இதை வாசித்து காட்டுபவன் தன் அசாக்கிரதையாலும் அல்லது ஒன்றுக்கொன்று தவறுதலாகவும், அல்லது அர்த்தம் சொல்லுவதிலும், ஒருவேளை பிசகு ஏற்படலாம். அன்றியும், அனேகரின் விஷயங்களில் தாய் தந்தையர்கள் குழந்தை பிறந்த நேரம் சரிவர குறிக்காத காரணத்திஞல், தவறுதலின் பேரில் சொல்லப்பட்ட சாதக விஷயங்கள் சாதாரணமாக சரியாகவும், உண்மையாகவும் இருக்கவே இருக்காது. அவ்வியங்களில் சோதிடம் சொல்பவரை நிந்திக்கக் கூடாது.

பூர்வ கருமத்தின்படி, செய்வ சங்கல்பமாக ஏற்பட்ட நோய்களுக்கு, தெய்வீகமுறைப்படித்தான் சிகிச்சை செய்யவேண்டும். ஆகவே, சோசியத்தைப் பார்த்து கரும காண்டத்தின்படி, இன்ன விதமான நோய் எப்படி நிவர்த்தியாகு மென்பதை விவரமாய்த் தெரிந்து கொள்ளலாம். இவ்விதமான விஷயங்கள் கௌதமர், புஜண்டர் முதலானவர்களால் செய்யப்பட்ட நாடி நூற்களில் கண்டறியலாம்.

3. சித்தர் நோக்கம்:

மனிதர்களுக்காக இவ்வுலகின் கண்வரையறுத்திருக்கப்பட்ட விஷயங்களைப் பற்றியும், அவர்கள் யாதொரு இடையூரின்றி உயிர் வாழ்வதற்குண்டான வசதிகளைப் பற்றியும் சித்தர்கள் கொண்ட கருத்துக்களாவன.

1. சிருஷ்டி முறை எக்காலத்திலும் ஒன்றே. மனிதன் வாழ்க்கையும், அவன் நோய்களும், உலகம் முழுவதிலும் எக்காலத்திலும் ஒன்றே வைத்தியக் கொள்கையும் உலக முழுவதிலும் இப்பொழுதும், எப்பொழுதும் எல்லாக் காலத்திலும் ஒரே மாதிரிதான். ஏனெனில் சிருட்டி காலத் துவக்கத்திலிருந்து தனிப்பட்ட முறைமையில் மனிதப்போக்கும், ஒழுங்கு முறையும் கடவுளால் வகுத்து வண்ணமாகவே முன்னமும், இப்பொழுதும், ஒரே மாதிரியாய்தான்

இருந்து வருகிறது. இனிமேலும் அப்படியேதான் எக்காலத்திலும் இருக்கும். இதில் யாதொரு பேதங்களும் கிடையாது. மனிதன் தோன்றிய போதே மருந்துகளும் நிவர்த்திக்காக கூடவே உண்டாயிற்று.

2. 'அண்டமே பிண்டம், பிண்டமே அண்டம்' அதாவது உலகத்தில் இருப்பதுவே மனிதனுள்ளும் இருக்கிறது. ஆகவே, நவக்கிரகங்களும், பஞ்ச பூதங்களும், அதன தன் கிரித்தியங்களை மனிதன்மேல் செலுத்துகிறதினுல், மனிதன் அதற்குட்பட்டவனுகிருன். ஆகையால் சுபாவக்கிரித்தியங்கள் நல்லதாயின் மனிதனுக்கும் நன்மையே உண்டாகும். கெடுதியாயின் பொல்லாங்கையே விளைவிக்கும். பிரகிருதி சுபாவத்தில் உலகத்தைக் காக்கும் தேவதைகளின் செயல்களால், இயற்கையில் கெடுதிகளுக்கு இட முண்டானுல், பெருவாரி முதலிய கொள்ளை நோய்கள் உற்பத்தியாகி, அதனுலேற்படும் விஷத்தன்மை மனிதனையும் தாக்கும். ஆத்ம கோளத்திற்குள் உள்ள தொத்துக் கிருமிகளால் காரணங்கள் ஏற்பட்டு, பிரகிருதியிலுள்ள சூக்கும காரணங்களை அனுசரித்தால், பெருவாரியாக கொள்ளை நோய்கள் ஏற்பட்டு நாசத்திற்கு ஏதுவாகும்.
3. பிண்டமே அண்டம். ஆகவே மனிதனே சிருட்டி வகையில் மேம்பட்டவன். ஏனெனில், வேறு பிராணிகளில் காணப்படாத தேர்ந்த பேரறிவு இவனுக்குண்டு. மனிதனே உலகம் என்ற முறைமையில், இவன் தனக்குள்ளிருக்கும் அண்டத்தை ஆகாயத்தின் ஓர் பாகமாக வாய்ந்துள்ளான்.
4. மனித வுடம்பினுள் ஒவ்வொரு அவயமும் தனக்கு வேண்டியவற்றை விருத்திக்காக, பிரகிருதியில் மூலப்பகுதியினின்று கிரகித்துக் கொள்கிறது.
5. பேரறிவுடைய மனிதன் தான் தன் இயற்கைக்கு மாருக நடப்பவன், அப்படி நடப்பதினுல் தன் உடம்பின் ரூபத்தில் அதீத கிரித்தியங்களினுல் ஒன்றும் ஏற்படாவிட்டாலும், தனது குணுதிசயங்களை கெடுத்துக் கொள்கிருன்.
6. எல்லா குழந்தைகளும் ஏக காலத்தில் பிறக்குமாயின், அவைகள் ஒரே மாதிரியாக அமைந்தனவாகும். ஆரோக்கியமும், நோய்களும் ஒரே காலத்தில் உண்டாகும். இரட்டைப் பிள்ளைகள் விஷயத்தில் இவை தெட்டென விளங்கும். ஆனுல் கருத்தரிக்கையில் மாத்திரம் இவ்விதி ஒவ்வாது. ஏனெனில் கருமானுசாரப்படி, கன்தேக சுபாவத்தில் எதுஉளதோ, அதையே உரிமையாகக் கொண்டு பிறக்காலால் வித்தியாசங்கள் ஏற்படும்.
7. தெய்வ அருள் மனிதனுக்குள்ள சுபாவத்தன்மையை மாற்றி உடம்பிற்கு ஆரோக்கியத்தை உண்டாக்கும்.
8. சுயேச்சைத் தன்மையில், மற்றப் பிராணிகளைவிட மனிதன் நோய்க்கு வெகு சுலபமாக உண்டாகிருன்.
9. இயற்கையில் வியாதிகள் தானே உண்டாகும். பிறகு தானே நீங்கும். ஆகவே, வைத்தியனுக்கு இவ்வியற்கையின் போக்கு இன்னதெனத் தெரிய வேண்டும். எவன் பிரகிருதியின் கூறுபாடுகளை தெளிவாக அறிகிருனே. அவன் தான் மனிதவுடம்பின் அமைப்பின் கூறுபாடுகளையும் இயல்பிலேயே தெரிந்தவனுகிருன்.
10. 'அண்டமும் பிண்டமும் ஒன்றே அறிந்துதான் பார்க்கும்போது' என்று சட்டமுனி நிகண்டில் கூறியுள்ளபடி, மனிதனின் இரத்ததாது செவ்வாய் கிரகத்தை அனுசரித்ததாகும். இது மாதிரியே ஆத்தும நிலைகள், சுக்கிரனுடைய ஆதரவை ஒட்டி நிற்கும். இவ்வித ஆத்தும ஆதரவு ஏற்படா

விட்டால் மனிதருக்கும், மற்றப் பிராணிகளுக்கும் சந்ததி விருத்திக்கு ஏதுவான காமவிச்சையே உண்டாகாது. ஏனெனில் உலகத்திலுள்ள உயிர் பிராணிகளெல்லாம் சுக்கிரனுடைய சம்பந்தத்திற்கு உட்பட்டதே. ஆகவே, ஆண் பெண் இருவருக்கும் ஏற்படும் காம நட்புக்கு சுக்கிரனுடைய அம்ச சம்பந்தம் அவசியம் வேண்டும். (ஈதனுல் தான் வெள்ளிக்கிழமை சம்போகத்திற்குகந்த நாள் என்று கருதப்படும் போதும்)

11. மனிதனிடத்தில் இரண்டுவித அமைப்பின் கூறுபாடுகள் உண்டு - அதில் ஒன்று, தேகத்தின் வெளி அமைப்புக் கூறுபாடு, மற்ரென்ரே, உள்ளமைப்பின் கூறுபாடு. முன்சொல்லிய ஒன்றுதான் இத்ஸ்தூல உடம்பை அனுசரித்து . மற்றொன்றுக்கும் உடம்பை ஒட்டியதாகும். ஆகவே, நாம் உள்ளுடம்பின் கூறுபாட்டை அறிந்துவிட்டால், மூலவஸ்து மூலியமாய் மனிதனுக்குள்ள நோயையும் அதற்குண்டான நிவர்த்தியையும், எளிதில் தெரிந்துக்கொள்ளலாம்.

12. மனிதன் தனக்கு இயல்பிலேயே அமைந்த பூரண சக்தியையும் சரியான வழியில் காட்டுவதற்கு மாயை இடங்கொடுக்காது அப்படி அதையும் மீறி, இத்தடையை கடந்துவிட்டால் மேற்படி இயற்கை சக்தி உடனே தனது பூரண சக்தியை காட்டி விடத் துவங்கும். அப்போது தான் யோகிகளைப் போல் அபரா சக்திகள் கை கூடிவிடும்

13. வைத்தியன் தான் வைத்தியத் தொழிலில் எவ்வளவு தேர்ச்சியடைந்திருந்தாலும், சோதிட அனுபவமில்லாமற் போனுல் அது பயன்படாது. ஏனெனில், நமது நாட்டு வைத்தியம் முன்னேற்ற மில்லாமல் இத்தனை வருஷங்களாக சீரழிந்த ஒரே நிலையில் நிற்பதற்கு, சோதிட விஷயத்தையும், வாத பித்த சிலேட்டுமக் கூறுகளையும் அறியாததே முக்கிய காரணங்களாகும். ஆனுல் தற்கலத்தில் அவைகளின் உண்மை விஷயங்களை ஒருவராது எளிதில் தெரிந்து கொள்வது சாமானிய காரியமல்ல.

14. எவனொருவன் பஞ்ச பூதங்களின் இரகசிய விதிகளின் உண்மையை, அதாவது பஞ்சீகரண சக்தியை தெரிந்து கொள்ளுகிருனே, அவன்தான் ஒரு உலோகத்தை மற்ரெரு உலோகமாக மாற்ற சக்தி வாய்ந்தவனுகிருன். ஏனெனில், உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் ஆதிமூலப் பொருள் என்னும் வஸ்துவினிடத்தே யிருந்து தோன்றியது. ஆகவே, ஏகம், உலகத்திலுள்ள மற்றவஸ்துக்கள் முழுமையும் கூட்டு அல்லது கலப்பே ஒழிய வேறல்ல.

சித்தர் பட்டை, கருப்பு சித்திர மூலம், சித்தர பதிணெண்மர், பதினெட்டு சித்தர்கள், அவர்களாவன.

1. திருமூலர்	7. போகர்.	13. கரூரார்
2. புல்ஸ்தியர்.	8. புலிக்கீசர்.	14. அகப்பேய்
3. நந்தி தேவர்.	9. கொங்கணவர்	15. தேரையர்.
4. இடைக்காடர்.	10. அழு கண்ணி.	16. சட்டைமுனி.
5. அகத்தியர்	11. பாம்பாட்டி	17. பூனைக் கண்ணர்.
6. புண்ணுக் கீசர்	12. குதம்பை.	18. காலங்கி

4. சித்தர் நூற் சிறப்பு

சித்தர்கள் தங்கள் முறைப்படி செய்த அனேக விதமான விஷயங்களைப் பற்றிய நூற்களை, மற்ற முறையில் செய்த நூற்களோடு ஒத்துபார்க்கம்போது ஏற்படும் மேம்பட்ட முடிவுகளாவன.

1. சித்த முறைப்படி, மனிதனுனவன் (அ) பஞ்சபூத அம்சங்கள், (ஆ) கிரகங்களின் அம்சங்கள், (இ) பிரகிருதியின் மூலத்தில் உண்டாகி, கிரகாசம் பந்தமும், உலகலெனகீக சம்பந்தத்தையும் அனுசிரித்த உடம்பிலுள்ள ஏழு தத்துவங்களையும், கொண்ட ஆண்மாவை பொருந்தியவனுவான். ஆகவே, பூர்வ நூற்கள், மனிதனை கடவுளுக்கு சமானவன் என்று பலமுறையும் வற்புறுத்துகின்றன. ஆனுல், தற்காலத்து மேனுட்டு நூற்களோ, மனிதனை சாதாரண இருகால் சீவனென்றும், (அவ்விதமாக எண்ணுபவனையும் சேர்த்து) அது தவிர வேரென்றுமில்லை யென்றும் ருஜுப்படுத்த முயற்சிக்கின்றது.

2. பிரகிருதி வடிவமாயுள்ள இவ்வுலகம் எங்கும் நிறைந்த பரமாத்துமா சொருபமான அனேக ரூபபேத மாயுள்ள உயிர்ப்பிராணிகளே தவிர, ஒன்றையும் உயிரில்லா வஸ்துவாக கொள்ளப்படாது. ஏனெனில், எது உள்ளவோ, அது மறுபடியும் இயற்கையின் கருவில் தோன்றி வேறுவித ரூபமாகப் பிறக்கிறது. அவற்றுள் மனிதன் ஒருவன்தான். கடவுளுக்கு மிக்க நெருங்கிய சம்பந்தமுள்ளவனுவான்

3 சித்த வர்க்கத்தைச் சார்ந்த ஞானிகள், உலகத்தை ஆட்டுவிக்கும் சக்திகள் இன்ன தென்றும், வெகுதூரத்து விஷயங்களையும் தங்கள் தியான சிருஷ்டியால் கண்டறிவார்கள். தற்காலத்து மேனுட்டு நூற்படி இறந்த மனிதனைத்தான் தெரியும், அவனுக்குள்ளேயிருக்கும் இயற்கை உயிர்ச் சக்திகள் இன்னதென்று தெரியாது. வைத்தியத்திலும், அனேக வழியில் சேகரித்து தெரிந்து கொண்ட அறிவையும்,தான் கொண்ட நினைவையும், கருத்தையும் சேர்த்து ஆதாரமாக ஏற்படுத்திக் கொண்டு சரியான நூல்வழி இதுவே வென்று கருதுகிருர்கள். அவர்களுக்கு வஸ்துக்களின் வெளித்தன்மை தான் முக்கியமாகத் தெரியும். அன்றியும், புகைவண்டி, வானவூர்தி முதலிய புதிதாகக் கண்டுபிடுத்தயந்திரங்களும் தெரியும்.

4. பூர்வநூல், மனிதனுக்கு உலகத்தையே தன்வசமாக்கிக் கொள்ளக்கூடிய சக்தியை அளிக்கிறது. மேனுட்டு நூற்களோ, மனிதன் தன்னுடைய களதியை மாத்திரம் தூக்கவல்ல சக்தியை பெற்றிருக்கிருன் என்று அறிவிக்கிறது.

5. பூர்வ நூல் தெய்வதன்மை பொருத்திய உன் மனிதனை குறிக்கிறது. தற்காலத்து நூலோ ஒரு யோக்கியதையுமில்லாத வெளி மனிதனை மாத்திரம் காட்டுகிறது.

6. பூர்வநூல், மனிதன் உயிரோடிக்கிருன், தான் பிரியப்பட்டால் சாகாமல் நீண்டகாலம் இருக்கலாம் என்பதைக் கற்பிக்கிறது. ஆனுல் தற்கால நூலோ மனிதன் சில வருஷங்கள் மாத்திரம் தான் உயிருடன் இருக்கலாமென்று கட்டுப்படுத்துகிறது.

7. பூர்வ நூலில், அனேக ஆயிர வருஷங்களுக்கு முன் கண்டு அறிந்த விஷயங்கள் மறுக்கப்படவில்லை. ஏனெனில் இவைகள் உண்மையையே ஆதாரமாகக் கொண்டதினுல், எப்பொழுதும் உண்மையே, உண்மையத்

தவிர வேறொன்றுமில்லை. ஆகவே, அவைகளை மறுக்கவே முடியாது. இது வரையிலும் மறுத்ததும் கிடையாது. மேனுட்டார் அனுசரிக்கும் கொள்கைகள் பிரதி வருஷங்களும் மாறும். பழையன கழிந்து, புதியன தங்கள் இஷ்டப்படி ஏற்படுத்திக்கொண்டு, எளிய உயிர்ப்பிராணிகளை கையாள்வதற்கு இடங்கொடுக்கும். ஆகவே, எக்காலத்தறிகும் களஞ்சியமாகவும், எவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய அறிவு வாய்ந்ததாயும், முக்காலத்திற்கும் உபயோகப்படும் முறைமையில் உள்ளதுதான் உண்மையான நூல் என்று கருதப்படும். ஆனுல், மேனுட்டு நூலோ அப்படியல்ல, தெரிந்தும் தெரியாத விஷயங்களை ஒருங்கே திரட்டிய ஓர் நூலே ஒழியவேறல்ல.

5. சித்தர் சமாதி,

சித்தர்கள் தங்கள் உயிரை நீத்து இலிங்க வடிவமாகி நிலைபெற்ற விடம். பொதுவாக சமாதி என்பது மனதை ஒருமைப்படுத்தி தன் வசமாக்கி உலக விவகாரங்களை மறந்து நிற்கும் நிலைமை, இது இரண்டு விதம், அதாவது சவ் விகற்பம், நிரு விகற்பம். ஒன்றில், சித்தர்கள் தங்கள் இயற்கை சக்திகளை வென்று மேன்மையான எல்லாவித சித்திகளும் அடைவார்கள்; மற்றொன்றிலோ, யாதொரு பந்தமில்லாமற்படி போதநிலையடைந்து இருப்பார்கள். ஆகவே சித்தர் சமாதி நிலையில் தன்னைத்தான் அறியும் ஆத்ம சக்தியை அடைவார்கள். அன்றியும், தன் ஆத்துமாவை மற்றொன்று உடம்பிலும் புகும்படிச் செய்யக் கூடும். அவர்களின் கடைசியான கொள்கையோ, ஆத்ம ஞானத்தை அடைவதாகும். ஆதலின், சித்தர்கள் தங்கள் உருவத்தை இலிங்க வடிவமாக்கி நிலையுற்று இருப்பார்கள். இதுதான் சித்தர் சமாதி. இவ்விதமான சமாதிகள் இந்திய நாடு முழுவதிலும் உண்டு. ஆயினும், தமிழ் நாடாகிய தட்சண பாகத்தில் விசேஷமாய்க் காணலாம். வேறு சில ஊர்களிலும் உண்டு. இச்சமாதிகளின் மேல் கோயில் கட்டி ஸிந்து நாதக் கூருகளாவுள்ள இந்த லிங்கத்தையும் ஆவுடையார் என வழங்குங் சுத்தி பீடத்தையும் சேர்த்து சிவரூபமாகக் கொண்டு நிலை நிறுத்துவார்கள். ஏனெனில், சாதாரண கோயில்களைவிட இதற்கு உள்ள மகத்துவங்கள் மிகச் சிறந்தது. இவ்விதமான பிரசித்தி பெற்ற கோயில்கள் நால்வரால் பாடப் பெற்றுள்ளன. ஆகவே, சித்தர்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வெவ்வூரில் சமாதியானுர்களோ, அச் சமாதிகளின் மேல் சோழராசனுல் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.

அன்றியும், நூற்களி லில்லாத எவ்விதமான விஷயங்களையும் மூல சாட்சியங்களால் வேறு வகையில் பரிசீலனை செய்யும் பக்தியாளர்களும், மறைந்து கிடக்கும் பூர்வ வஸ்துக்களை கண்டறியும் ஆராய்ச்சியாளர்களும் தாங்கள் சளைக்காமல் மேற்கொண்ட உழைப்பினுல் தான், சரித்திரமே ஏற்படாத ஆதிகாலத்து தமிழர்கள் வாழ்க்கை இவ்வளவு சிறப்பு வாய்ந்ததென்று, தெட்டன விளங்களாயிற்று. இத்தென்னிந்தியா வாகிய தட்சணத்தில் அனேக மகான்களின் பக்தி மார்க்கப் போக்குகள் அடங்கிய விஷயங்கள் அனேகம் வெளிப்படாமல் இன்னும் மறைந்து கிடக்கிறது. மேற்கண்டபடி, சமாதி யடைந்த சித்தர்களின் பெயரும், அவர்களுக்கு சோழராசனுல் கட்டப்பட்ட கோயில்களின் ஊர் பெயரும் அடியிற் கண்டுள்ளன.

அவையாவன.

1. திருமூலர் - சிதம்பரம்.
2. கொங்கணவர் - திருப்பதி.
3. போகர் - பழனி மலை.
4. சட்டைமுனி- சீர்காழி.
5. மச்சமுனி - திருப்பரங்குன்றம்.
6. கருராா் - தஞ்சாவூர்.
7. இராமதேவர் அல்லது யாகோப் - அழகர் மலை.
8. இடைக்காடர் -திருவண்ணாமலை.
9. கமலமுனி- திருவானூர்.
10. பாம்பாட்டி - திருக்கடையூர்.
11. புண்ணக்கீசர் - நாங்கனுச்சேரி.
12. கோரக்கர் - பொய்யூர்.
13. அழுகண்ணி - நாகப்பட்டணம்.
14. சுந்தரானந்தர் - மதுரை.
15. குதம்பை - மாயவரம்.
16. கடுவெளி - காஞ்சிபுரம்.
17. நந்தி தேவர் - காசி.
18. வால்மீகர் - எட்டுக்குடி.
19. நாரதர் - திருவிடைமருதூர்.
20. பதஞ்சலி - இராமேசுவரம்.
21. காசிபர் - உருத்திரகிரி.
22. விஸ்வாமித்திரர் - திருவாடுதுரை.
23. காலங்கி - காஞ்சிபுரம்.
24. தன்வந்திரி - வைத்தீஸ்வரன் கோவில்
25. கும்பமுனி - கும்பகோணம்.

6. சித்தர்களின் கொள்கை

சித்தர்கள் ஒவ்வொருவரும், தாங்கள் எழுதியுள்ள நூற்களாகிய வாதம், வைத்தியம், யோகம் ஞானம் இவைகளின் விஷயங்களை தெளிவாகக் கண்டிருக்கிருர்கள். மேற்கண்ட நான்கு வகைகளில், ஒவ்வொன்றிலும், அவர்கள் கருத்தின் கோட்பாடுகளை அடியிற் கண்டபடி சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன.

I. வாதம் :-

1. வாதி முக்கியமாய் தெய்வபக்தியுள்ளவனுயிருக்க வேண்டும். ஆகவே, வைராக்கியம், தயாளம், தருமம், மேலான மன சுத்தம் ஆகிய இக்குணங்கள் அவசியமானது.
2. இவனுக்கு பணம் அல்லது பொன் பேரில் இச்சையே இருத்தல் கூடாது.
3. இவன் பிறவியிலேயே சோதிட கிரகங்களின்படி வாதிக்குள்ள சக்திகள், பூர்வ கருமானு சாரப்படி அமைந்துள்ளவனுயிருக்க வேண்டும்.
4. எப்படி ஒரு குழந்தை கருப்பத்தில் தரிக்கும்போது, பஞ்ச பூதங்களின் உறவு பிரதானமோ, அதேமாதிரி வாதம் சித்திப்பதற்கு மேற்கண்ட ஐம் பூதங்களின்

உறவு கிரமப்படி அமைய வேண்டும். இதில் தவறுதல்கள் ஏற்பட்டால், கருவிலிருக்கும் சிசு எப்படி சிதைந்து போகுமோ, அதுபோல, வாதம் முறைகளும், முறை பிசகினால் சித்தியாகாது.

II. வைத்தியம் :

1. இயற்கையில் ஏற்பட்ட விதிகளை சரிவர தெரிந்து கொள்ளாமலும், அதற்குண்டான உண்மையறிவை செலுத்தாமலும், செய்யும் வைத்தியமாவது எப்பொழுதுமே, கொள்கையும், அபிப் பிராயத்தையும், மனப்போக்கையும் மேற்கொண்டதாக இருக்குமே ஒழிய, உள்ளபடி நோய்களை நிவர்த்திக்கும் குணம் வாய்ந்ததாய் இருக்கவே இருக்காது.
2. சித்தர்களின் கொள்கைப்படி, மனிதனுக்கு நோய்கள் ஏற்படுவதெல்லாம் துஷ்ட தேவதை அல்லது கிரகக் கோளாறுகளினாலே ஒழியவேறல்ல. ஆகவே, இத்தகைய கெட்ட கோளாறுகளை தடுக்கவேண்டி அனேக நூதனமான விதிகளையும், அனுஷ்டானங்களையும் மாந்திரீக, மனோவசியக் கிரியைகளையும் தாங்கள் நூற்களில் காட்டியுள்ளார்கள்.
3. மனிதன் தன்னுடைய சொந்த சக்தியினால் ஒன்றும் செய்துவிட முடியாது, ஏனெனில் தனக்கு ஏற்படும் நம்பிக்கையின் ஆதரவினால் தான் ஒவ்வொரு காரியமும் சித்தியாகும். இது வைத்தியனுக்கு முக்கியமாய் தெரியவேண்டிய விஷயம்.
4. வியாதிகள் இயற்கையில் தானாகவே உண்டாகிறது, தானாகவே தான் அவ்வியாதிகள் குணப்படுகின்றது. ஆகவே, வைத்தியர்கள் மனிதனுக்கு சுபாவத்தில் ஏற்படும் குற்றங்கள், என்ன விதமாய் ஏற்பட்டதென்பதை அறிய வேண்டும்.
5. வியாதிகளும், மற்ற கெடுதியான அசம்பவங்களும், கிரக தோஷங்களினாலும், பூர்வ கருமானு சாரத்தினாலும்தான் ஏற்படுகிறது என்பதை சித்தர்கள் பூரணமாக தெளிந்துள்ளார்கள்.
6. ஒரு நோயாளிக்கு சிகிச்சை செய்வதற்கு முன்னதாகவே, வைத்தியன் நோயாளியின் சாதகப்படி கிரக நிலைகள் தெரிய வேண்டியது முக்கியம். ஆகவே, தெரிந்த பிறகுதான் வைத்தியம் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

III. யோகம் :-

1. ஒரு யோகியானவன், பரகாயப்பிரவேசம் அதாவது பிறருடைய உடம்பிற்குள் தான் புகுந்துவிடக் கூடும். இறந்த பிரேதத்தில் கூட பிரவேசிக்கலாம், பிறகு இவ்வுடம்போடு எழுநது இங்கு மங்கும் கூடத் திரியச் செய்யலாம். அன்றியும், புதிதாக மனிதரை சிருட்டிக்கலாம். மனதையும் உண்டாக்கலாம். இதை 'சிருட்டித்த உடம்பு','உண்டாக்கின மனது' என்று கூறப்படும்.
2. யோகாப்பியாசம் ஒன்றினால் தான் பிறப் பிறப்பை, வெகு சீக்கிரமாகவும், சுருக்கமாகவும் முடித்துக் கொள்வதற்கு குறுக்கான வழி. இத்தகைய யோகம், ஒரு குரு விளந்து தொட்டுக் காட்ட வேண்டும்; அப்படியில்லா விட்டால் உடம்பிற்கு கெடுதி ஏற்பட்டு சௌகரியம் உண்டாகாது.
3. பரிசுத்தமான மனதே, யோக விஷயத்தில், ஒரு குருவாக்த் தனக்குள் நின்று காட்டிக் கொடுக்கும். ஏனெனில் தெய்வ பக்தி மேலுக்கு ஓங்க தன்னைத்

தானறிவதற் குண்டான அறிவு விளக்கமும் மேம்பட விருத்தியாகும். அப்போது அந்த உயர் நிலை பெற்ற மனதே குருவாக நிற்கும்.

4. பஞ்ச பூதங்களை யோகிதான் ஆளுகைக் குள்ளாக்கலாம். ஆகவே, இயற்கையிலுண்டான பேதங்களையும் மாற்றலாம். சிருஷ்டிவகையில் எவ்விதமான ரூபமும் எடுக்கலாம். தன்னுடைய உடம்பையே போக்கவும் செய்யலாம்,

5. குண்டலினிக் குள்ளே வலிவும், நரம்பு சக்தியும் தகுந்தபடி இல்லாவிடில் இருதயம் துடிக்காது நுரையீரல் மூச்சு விடாது, உடம்பில் இரத்தோட்டம் உண்டாகாது. மற்ற உறுப்புகளும் தனக்குரிய இயற்கை தொழில்களை முடிக்கவே இயலாது.

6. மனிதருக்கு இயல்பிலே தங்களுக்குள் உண்டான காந்த சக்தியினால் உலகத்தாரை தன் வசமாக்கவும், ஒரு தேசத்து வகுப்பினர்களை தன் ஆட்சிக் குள்ளாக்கவும் செய்யலாம். இதற்கு சாதாரணமாக பிராணாயாமத்தினால் உண்டான வலிவே காரணமாகும்.

IV. ஞானம் (தத்துவ ஞானம்)

1. உலக சிருஷ்டியில் மனிதன் ஒருவனுக்கே, எல்லாவித சக்திகளும் உடம்பினுள் மறைந்துள்ளது. இச்சக்தியால் மனிதனை கடவுளின் ஆற்றலுக்கு சமமாகவே சொல்லலாம். ஆனால் மனிதனோ, இப்படிக்குள்ள சக்திகளை கொஞ்சமேனும் கவனியாது தன்னுடைய முயற்சியினால் அதை வசமாக்கிக் கொள்ள வழிதெரியாததே ஒரு பெருங் குற்றமாகும்.

2. மனிதனுக்கு இயல்பிலே இருக்கும் பூர்ண சக்தி, மாயையினால் மறைக்கப்பட்டு, சரியான பாதையிற்செல்ல ஒட்டாமல் தடுக்கும். அப்படி தடுக்காதபடி செய்து விட்டால், இயற்கை சக்தியானது தனது பூரண வலிவைக் காட்டும்.

3. நமது உடம்பில் உள்ள உயிர் இருக்கவும், நிலைபெறவும் காரணமாகவுள்ள ஆத்மாவிற்கு, இது விஷயமாக அனேக ஆதரவுகளுண்டு, அவைகளாவன-பஞ்ச பூதங்கள், ஆருதார நிலைகள், மூன்று நாடிகள், முக்குணங்கள் இவை முதலான 96 தத்துவங்கள்.

1 **அரவிந்த் பிருந்தா பற்பொடி**

பல்வலி, பல் அசைவு, எளிர் வீக்கம், இரத்தக் கசிவு, பல் கூச்சம், வாய் துர்நாற்றம் இவைகளை போக்கி பற்களுக்கு உறுதியளித்து முத்துப்போல் பளிச்சிடச் செய்து பாதுகாக்கிறது. தினமும் காலை, இரவு பல் துலக்கி பயனடையுங்கள்.

2 **அரவிந்த் சிவப்பு பற்பொடி**

பல்வலி, பல் அசைவு, ஈறு வீக்கம், வாய் துர்நாற்றம் பல் சொத்தையை தடுத்து பற்களுக்கு உறுதியளிக்கிறது.

தினமும் காலை, இரவு பல் துலக்கி பயனடையுங்கள்.

3 **ஏரோபாம்**

சளி, ஜலதோஷம், தலைவலி, உடம்பு வலி, தசை பிடிப்பு, முதலியவைகளை போக்கும் வலி நிவாரணி.
அளவு : வெளி உபயோகத்திற்கு மட்டும்.

4 **ஹெர்போ பீவரெக்ஸ் கேப்சூல்**

சுரம், உடம்பு வலி, மற்றும் வாத, பித்த, கப சுரங்களுக்கு ஏற்ற மூலிகை கேப்சூல்.
அளவு :
பெரியவர்களுக்கு வேளைக்கு 1 வீதம் தினமும் 4 வேளை, சிறியவர்களுக்கு 1/2 கேப்சூல் வீதம் தினமும் 4 வேளை, தேனுடன் அல்லது வெந்நீருடன்.

5 **ருமாடிகோ கேப்சூல்**

எல்லா வகையான வாத ரோகங்கள், மூட்டு வலி, வீக்கம், இடுப்பு வலி, நரம்பு வலி, தசை வலி எல்லாவகையான நீர்க்கட்டுகள்.
அளவு :
வேளைக்கு 1 கேப்சூல் வீதம் தினமும் 3 வேளைக்கு பாலுடன். இதனுடன் ஏரோலிவ் மற்றும் சந்தானதி கேப்சூல்ஸ் சேர்த்து உபயோகித்தால் சிறந்த பலன் தரும்.

6 **டயாடினில் கேப்சூல்**

அமிபியாஸிஸ், வயிற்றுப்போக்கு, ரத்த சீதபேதி, கடுப்புக் கழிச்சல்(சீதபேதி)
அளவு :
1 கேப்சூல் தினமும் 4 வேளை, உடனே நிறுத்த 1 மணி நேரத்திற்கு 1 முறை 2 கேப்சூல் வீதம் உட் கொள்ளவும். ரத்த பேதிக்கு A டைலோ ஹெர்ப் கேப்சூல் சேர்த்து உபயோகிக்கவும்.

7 **பெப்சோனில் கேப்சூல்**

மதுமேகம், நீரழிவு, அதிக பசி, சோர்வு, அசிதி, தாகவறட்சி, கைகால் எரிச்சல்.அதிமூத்திரம் போன்ற மேக ரோகங்களுக்கு சிறந்த மூலிகை தாதுக்கள் அடங்கிய கேப்சூல். சர்க்கரை நோய்க்கான சிறந்த நிவாரணி.
அளவு : 1-2 கேப்சூல்ஸ் தினமும் 2 வேளை ஏரோலிவ் மற்றும் சந்தானதி கேப்சூல்ஸ் சேர்த்து உபயோகித்தால் சிறந்த பயன் தரும்.

8 விட்டோஹெர்ப் கேப்சூல்

தாது நஷ்டம், நரம்புத் தளர்ச்சி, விரைந்து விந்து வெளியேறுதல், ஆண்தன்மை குறைவு, நரம்புக்கு வலுவூட்டி இழந்த சக்தியை மீண்டும் பெற்று இளமை உணர்வோடு திகழவும், நோயுற்ற பின்பு உடல் ஆரோக்கியத்திற்கு உபயோகிக்கவும்.

அளவு : 1 கேப்சூல் 3 வேளை: தயாரிப்பு அளவு : 10கொண்ட பிளிஸ்டர் 50, 100 எண்ணம்.

ஏரோலிவ் மற்றும் சந்தனாதி கேப்சூல்கள், மற்றும் விட்டாசவா டானிக் சேர்த்து உட்கொள்ளுவது சிறந்த பலன் கிடைக்கும்

9 ஹெர்பாஸ்மா கேப்சூல்

தும்மல், இருமல், ஈளை, நுரையீரல் அலர்ஜி, பிராங்கைடீஸ், இளைப்பு.

அளவு : 1 கேப்சூல்ஸ் தினம் 3-4 வேளை

தயாரிப்பு அளவு : 10 கொண்ட பிளிஸ்டர். 50, 100 எண்ணம். ஏரோலிவ் கேப்சூல்ஸ் சேர்த்து உட்கொள்வது சிறந்த பயன் அளிக்கும்.

10 ஏரோலிவ் கேப்சூல்

மஞ்சள் காமாலை, பாண்டு, சோகை, அஜீரணக் கோளாறு, வாய்வு முதலியவற்றை போக்கி கல்லீரலை பாதுகாக்கிறது.

அளவு :

1 முதல் 2 கேப்சூல் இரண்டு அல்லது மூன்று வேளைகள் தண்ணீரில், இத்துடன் ஏரோலீவ் டானிக் மற்றும் சந்தனதி கேப்சூலுடன் சேர்த்து உட்கொள்வது சிறந்த பயன் அளிக்கும்.

தயாரிப்பு அளவு : 50, 100 மற்றும் 10 x 10 பிளிஸ்டர்

11 சந்தனாதி கேப்சூல்

மேக வெட்டை, நீருக்கடுப்பு, சிறு நீரக கற்கள் வயிற்று எரிச்சல்,பயணச்சூடு, வாய்துர்நாற்றம் ஆகியவற்றை போக்குகிறது.

அளவு : 1 முதல் 2 கேப்சூல் வரை தண்ணீர் அல்லது மருத்துவரின் ஆலோசனைப்படி

தயாரிப்பு அளவு : 10 கொண்ட பிளிஸ்டர் 50, 100 எண்ணம்

12 ஹெர்பார்சுனா கேப்சூல்

இருதய படபடப்பு, அதிக வியர்வையுடன் மூச்சு திணறல் ஆகியவற்றை போக்கி இதயத்தை பலப்படுத்தி பாதுகாக்கிறது.

அளவு : 1 முதல் 2 கேப்சூல் வரை இரண்டு அல்லது 3 வேளைகள்.

தயாரிப்பு அளவு : 10 கொண்ட பிளிஸ்டர் 50, 100 எண்ணம்

ஏரோலிவ் மற்றும் சந்தனாதி கேப்சூல் சேர்த்து உட்கொள்வது சிறந்த பலன் அளிக்கும்.

13 ஹெர்ப்புடரின் கேப்சூல்

பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை, வெட்டை, மாதவிடாய் கோளாறு, கர்ப்பாசய கோளாறு, இடுப்புவலி, பலஹீனம், சோகை மற்றும் வலியுள்ள மாதவிடாய் குணமாகும். பெண்களுக்குமிகச் சிறந்த டானிக்.

அளவு : 1 முதல் 2 கேப்சூல் இரண்டு வேளைகள். இத்துடன் ஹெர்பூடரின் டானிக் மற்றும்.

தயாரிப்பு அளவு : 10 கொண்ட பிளஸ்டர் மற்றும் 50, 100 எண்ணம்,

சந்தனாதி கேப்சூல் சேர்த்து உட்கொள்வது சிறந்த பலன் அளிக்கும்.

14 ஹெர்போ ஒபிசிடி கேப்சூல்

உடல் பருமனை குறைத்து தேவையற்ற சதையையும், கொழுப்பையும் கரைத்து சீரான எடையும், சுறுசுறுப்பும் அளிக்க வல்லது.

அளவு : 1 முதல் 2 கேப்சூல் தினமும் இரண்டு முதல் மூன்று தடவை இத்துடன் ஏரோலிவ் மற்றும் சந்தனாதி கேப்சூல் சேர்த்து உட்கொள்வது சிறந்த பலன் அளிக்கும்.

தயாரிப்பு அளவு : 10 கொண்ட பிளிஸ்டர் மற்றும் 50 , 100 எண்ணம்.

15 ஏரோசைம் கேப்சூல்

அஜீரணம், புளித்த ஏப்பம், பசியின்மை, அமிலத்தன்மை, ருசியின்மை, நெஞ்சு எரிச்சல் ஆகியவற்றை போக்குகிறது.

அளவு : 1 முதல் 2 கேப்சூல் இரண்டு அல்லது 3 வேளைகள்.

தயாரிப்பு அளவு : **10** எண்ணம் கொண்ட பிளிஸ்டர். மற்றும் 50 100 எண்ணம் ஏரோலிவ் மற்றும் சந்தனாதி கேப்சூல்ஸ் சேர்த்து உட்கொள்வது சிறந்த பயன் அளிக்கும்.

16 ஏரோ மெஸ்ஸின் கேப்சூல்

தாமதித்த மாதவிடாய், சூலைக்கட்டு, கர்ப்பப்பை, அலர்ஜி மற்றும் வலி முதலியவற்றை போக்கி மாதவிடாயை ஒழுங்கு படுத்துகிறது.

அளவு : 2 கேப்சூல் 3 வேளைகள்

தயாரிப்பு அளவு : 10 எண்ணம் கொண்ட பிளிஸ்டர் மற்றும் 50, 100 எண்ணம்.

குறிப்பு : கர்பஸ்திரிகள் உபயோகிக்க கூடாது.

17 ஹெர்போ செர்பின் கேப்சூல்

நரம்பு பலஹீனம், படபடப்பு, அதிக வியர்வை, இரத்த அழுத்தத்தை சமன் செய்கிறது.

ஆளவு : 1 முதல் 2 வரை இரண்டு அல்லது 3வேளைகள்.

தயாரிப்பு அளவு : **10** எண்ணம் கொண்ட பிளிஸ்டர் மற்றும் 50, 100 எண்ணம். ஏரோலிவ் மற்றும் சந்தனாதி சேர்த்து உட்கொள்வது பலன் தரும்.

18 "ஏ" பைலோ ஹெர்ப் கேப்சூல்

மூலம், பவுந்திரம், ரத்த மூலம், ஆசன வாய் எரிச்சல், அரிப்பு, மலச்சிக்கல் முதலிய நோய்களுக்கு ஏற்றது.

அளவு : 1 முதல் 2 கேப்சூல் இரண்டு அல்லது மூன்று வேளைகள் அல்லது மருத்துவரின் ஆலோசனைப்படி.

தயாரிப்பு அளவு : **10** கொண்ட பிளிஸ்டர், 50 , 100 எண்ணம் ஏரோலிவ் மற்றும் சந்தனாதி கேப்சூல்ஸ் மற்றும் மூலமிர்தலேகியம் சேர்த்து உட்கொள்வது சற்று பலனை அளிக்கும்.

19 வல்லாரை கேப்சூல்

ஞாபக மறதி, இரத்த சுத்தி, மலச்சிக்கல், சோர்வு ஆகியவற்றை போக்கி உற்சாகம் தரும் கல்ப மருந்து.

அளவு : 1 முதல் 2 கேப்சூல் தினமும் வேளைகள்

தயாரிப்பு அளவு : 10 எண்ணம் கொண்ட பிளிஸ்டர் மற்றும் 50, 100 எண்ணம்.

20 ஏரோ ஸ்கின் கேப்சூல்

வெடி சூலை, மேக சூலை, இடி சூலை, தொழுநோய், விஷநீர், சிலந்தி, சிரங்கு, புழுவெட்டு, தடிப்பு, மூலம், பவுந்தரம், மேகம் ஆகியவற்றை போக்கி ரத்த சுத்தகரிப்புக்கு சிறந்தது.

அளவு : 1 முதல் 2 கேப்சூல் தினம் இரு வேளைகள் பாலில் ஏரோலிவ் மற்றும் சந்தனாதி கேப்சூல்ஸ் சேர்த்து உபயோகித்தால் சிறந்த பலன் கிடைக்கும்.

தயாரிப்பு அளவு : 10 கொண்ட பிளிஸ்டர் 50 ,100 எண்ணம்.

21 அருகன் புல் கேப்சூல்

எல்லாவிதமான தோல் நோய்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்தி கொடுத்து உடம்பை பலப்படுத்துகிறது. எல்லா வயதினருக்கும் ஏற்ற டானிக்.

அளவு : 2 , 4 கேப்சூல் வீதம் தினமும் இரண்டு வேளைகள்

தயாரிப்பு அளவு : 10 கொண்ட பிளிஸ்டரில் 50, 100 எண்ணம்.

22 ரசகெந்தி மெழுகு கேப்சூல்

எல்லா விதமான தோல் வியாதிகள், ஆரம்ப குஷ்டம், ஆரம்ப புற்று நோய்

அளவு : 1 முதல் 2 கேப்சூல் தினமும் 2 முதல் மூன்று வேளைகள் பால் அல்லது மோருடன்

23 மூலிகை குளிக்கும் தூள்

சர்மத்தை பளபளக்கச் செய்து நோய்கிருமிகளிலிருந்து பாதுகாக்கிறது. இயற்கை நறுமணம் உள்ளது. உடலுக்கும் தலைக்கும் தேய்த்து குளிக்கலாம்.

அளவு : வெளி உபயோகம் தண்ணீரில் கொழகொழ என கரைத்து உபயோகிக்கலாம்.

தயாரிப்பு அளவு : 100 கிராம்

24 ஹெர்புயூடரின் டானிக்

வெள்ளைப்போக்கு, மாதவிடாய் கோளாறு, கருப்பாசய கோளாறு, இடுப்புவலி, பலஹீனம், சோர்வு, சோகை, வலியுள்ள மாதவிடாய். மற்றும் பெண்களுக்கான ஆரோக்கிய டானிக் இத்துடன் ஹெர்புயூடரின் மற்றும் சந்தனாதி கேப்சூல்ஸ் உபயோகித்தல் சிறந்த பலன் அளிக்கும்.

அளவு : 2 டீஸ்பூன் தினம் 3-4 வேளை

தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி.

25 அரவிந்த் ஹெர்பெக்ஸ் காப்சிரப்

சளி, இருமல், பீனிசம், ஜலதோஷம், மற்றும் கபதோஷங்கள். இத்துடன் ஹெர்போஸ்மா மற்றும் ஏரோலிவ் உபயோகித்தல் சிறந்த பலன் கிடைக்கும்.

அளவு : 5-10 மிலி 3-4 வேளைகள்.

தயாரிப்பு அளவு : 100, 200 மற்றும் 400 ml.

26 ஏரோலிவ் டானிக்

மஞ்சட் காமாலே, கல்லீரல், மண்ணீரல் கோளாறுகள், பித்தாதிக்கம், பசியின்மை, ருசியின்மை, வாய்வு

அளவு : 5-10 மிலி 3-4 வேளைகள். இத்துடன் ஏரோலிவ் மற்றும் சந்தனாதி கேப்சூல் உபயோகித்தால் சிறந்த பலன் கிடைக்கும்.

தயாரிப்பு அளவு : 100, 200 மற்றும் 400 ml.

27 விட்டாசவா டானிக்

நரம்புதளர்ச்சி, வளர்ச்சியின்மை, மூளைச்சோர்வு, தூக்கமின்மை, அசதி, பலஹீனம், இரத்தக்குறைவு ஜீவ சக்தி, இத்துடன் விட்டோஹெர்ப் கேப்சூல் உபயோகித்தல் சிறந்த பலன் கிடைக்கும்.

அளவு : 5-10 மிலி 3-4 வேளை

தயாரிப்பு அளவு : 100, 200 மற்றும் 400 **ml.**

28 ஏரோ பைல் டானிக்

மூலம் பவுத்திரம், ரத்த மூலம், ஆசனவாய் கடுப்பு, மலச்சிக்கல்

அளவு : 5 முதல் 10 மில்லி தினமும் இரண்டு முதல் மூன்று வேளை. இத்துடன் **A** பைலோஹெர்ப், சந்தனாதி கேப்சூல்ஸ் உபயோகித்தால் சிறந்த பலன் கிடைக்கும்.

தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லி.

29 காயகல்பம்

(தாதுபுஷ்டி லேகியம்)

மேக வெட்டை, தாது பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, தன்னம்பிக்கையின்மை, மனத் தளர்ச்சி, வாழ்க்கையில் வெறுப்பு, வளர்ச்சி குறைவு, முகம் பொழிவின்மை, வறட்சி நோய்கள், சோகை போக்கி புத்துணர்வும் புதிய தெம்பும் அளிக்க வல்லது. ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்கிறது.

அளவு : 10-20 கிராம் தினம் 2 வேளை

தயாரிப்பு அளவு : 125, 250 மற்றும் 500 கிராம்.

30 வான்குமரி கல்பம்

வெள்ளை வெட்டை, கிரந்தி, இருமல், சளி, பசியின்மை, மலச்சிக்கல் போக்கி இரத்தத்தை சுத்தப்படுத்தி உடல் மெலிவை போக்கி தேக பலத்தை உண்டாக்குகிறது.

அளவு : 2 கிராம் 2 முதல் 3 வேளைகள்.

தயாரிப்பு அளவு : 125 கிராம், 250 கிராம், 500 கிராம்.

31 அரவிந்த் ஹெர்பல் டிரிங்க்

காபி, டீ, இவற்றிற்கு மாற்றாக உபயோகிக்க சிறந்தது. நரம்புகளுக்கு புத்துணர்ச்சியூட்டி ஜீரணசக்தியை பெருக்கி இதயம், கல்லீரல், சிறுநீரகம், சீராக இயங்க வைக்கவும் நோய்கள் வராமல் பாதுகாத்து உடலுக்கு வலிமையுண்டாக்கும்.

அளவு : 1/4 முதல் 1/2 டீஸ்பூன் 250 மில்லி தண்ணீரில் கொதிக்க வைத்து தேவையான அளவு நாட்டு சர்க்கரை சேர்த்து தினம் 2 வேளை அருந்தவும்

32 ஹெர்போ கிரீன் களிம்பு

(மூலிகை பச்சை களிம்பு)

அடிப்பட்ட புண், புரையோடிய புண்கள், காயங்கள், கட்டிகள், பருக்கள் முதலியவற்றிற்கு சிறந்தது.
அளவு : வெளி உபயோகம்.
தயாரிப்பு அளவு : 15 கிராம்.

33 டெர்மோ ஹெர்ப் களிம்பு

(மூலிகை சிகப்பு களிம்பு)

தீரும் நோய்கள் : எல்லாவிதமான சரும நோய்கள், கிரந்திநோய் புண் முதலியவைகளுக்கு சிறந்தது.
அளவு : வெளி உபயோகம்.
தயாரிப்பு அளவு : 15 கிராம்.

34 செம்பருத்தி கூந்தல் தைலம்

முடி உதிர்வதை தடுக்கிறது. இளநரையை போக்குகிறது. தலை பொடுகுகளை போக்கி, தலைசூடு, கண்காந்தல் நீக்கி கேசம் அடத்தியாகவும் பட்டுப்போன்றும் இருக்கச் செய்கிறது.
தினமும் தலைக்கு நன்றாக மயிர்கால்களில் படும்படி தேய்த்து வரவும்
அளவு : வெளி உபயோகம்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி, 450 மில்லி.

35 அருகன் தலைம்

: எல்லா விதமான சர்ம வியாதிகள், காயங்கள், சர்ம அலர்ஜி மற்றும் விஷக் கடியினால் ஏற்படும் சர்ம வியாதிகள்.
அளவு : வெளி உபயோகம்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

36 ருமாடிகோ தைலம்

எல்லா விதமான வாத வலிகள், மூட்டு வீக்கம், மற்றும் நரம்பு வலிகளுக்கு சிறந்தது.
அளவு : வெளி உபயோகம்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி, மற்றும் 400 மில்லி.

37 அரக்கு தைலம்

(தேரையர் தைல வர்க்கம்)

சுரம், தாது சுரம், உடல் கடுப்பு, சந்திரா வர்த்தம், சூர்யா வர்த்தம், மண்டை சூலை, இரைப்பிருமல், கற்றாழை நாற்றம், பல்வேர் வீக்கம், குரல் கம்மல், உழலை, குருதிக் கெடுதி, ஜவகைப் பாண்டு, நளிர் சுரம், நாட்பட்ட காய்ச்சல் ஆகியன.

உபயோகம் : தலைக்கும், உடலுக்கும் தேய்க்க.

தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லி.

38 பொன்னாங்கண்ணி தைலம்

(அகஸ்தியர் வைத்திய இரதினச் சுருக்கம் - 360)

எல்லா விதமான கண்நோய்கள், காசநோய், பித்தம், உஷ்ணம் தீரும்.

அளவு : வெளி உபயோகத்திற்கும், தலையில் தேய்த்து குளிக்கலாம்.

தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

39 நொச்சித் தைலம்

(தேரையர் தைல வர்க்கம்)

இருமல், இளைப்பு இருமல், எலும்புருக்கி நோய், உடல்வலி ஆகியன.
உபயோகம் : 1 முதல் 2 தேக்கரண்டி வீதம் வெந்நீரில் காலே, மாலே சாப்பிடவும். தலையில் தேய்த்து குளிக்கலாம்.பிடித் தைலமாகவும் பயன்படுத்தலாம்.

தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்

40 குருந்தொட்டித் தைலம்

வாதரோகங்கள், கீல்வாயு, தோல்பட்டை வலி
அளவு : வெளி உபயோகம்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

41 பீனிசத் தைலம்

எல்லாவித பீனிசம், நாட்பட்ட ஜலதோசம், தலைவலி ஆகியன.
உபயோகம் : வாரத்தில் ஒரு முறை தலையில் தேய்த்து குளிக்கவும்.
4 நாட்களுக்கு ஒரு முறை நசியமிடவும்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லி.

42 சிரட்டைத் தைலம்

(சித்த வைத்திய திரட்டு)

சொறி, படை சர்ம வியாதிகள்.
அளவு : வெளி உபயோகம், சம அளவு தேங்காய் எண்ணெயுடன் கலந்து பாதிக்கப்பட்ட இடங்களில் மட்டும் உபயோகிக்கவும். மற்ற இடத்தில் பட்டால் எரிச்சலைத் தரும்.
தயாரிப்பு அளவு : 30 மில்லி மற்றும் 60 மில்லிகளில்.

43 கையான் தைலம்

(தேரையற் தைல வர்க்கம்)

காசம், சுவாசம், சளியுடன் கூடிய இருமல் மூச்சுத் திணறல் ஆகியன.
அளவு : 1/2 முதல் 1 தேக் கரண்டி வீதம், உள்ளுக்கு இரு வேளை கொடுக்கவும். ஸ்நானத்திற்கும் உபயோகிக்கலாம்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

44 மத்தான் தைலம்

படை, சொறி, சிரங்கு, துஷ்விரணம், ஊன் வளருதல், கசியும் படை, பிளவை, காது, புண்ணில் சீழ் வடிதல், ஒழுகும் விரணங்கள் ஆகியன.
அளவு : மேற்பூச்சாக உபயோகிக்கவும். சீழ் வடியும் காதில் போடலாம். துணியில் தடவி புண்ணுக்குப் போடவும்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

45 புங்க தைலம்

(தேரையர் தைல வர்க்கம்)

சொறி, சிரங்கு, புண், புரையேறும் விரணம் ஆகியன.
அளவு : வெளி உபயோகத்திற்கு மட்டும்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

46 லகு விஷ முஷ்டித் தைலம்

வாத நோய்கள்
அளவு : வெளி உபயோகம்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 500 மில்லிகளில்.

47 புளு வெட்டுத் தலைம்

புழு வெட்டினல், மயிர் உதிர்ந்து வழுக்கை விழுவதை போக்குகிறது.
அளவு : வெளி உபயோகம்
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 500 மில்லிகளில்.

48 வெண்புள்ளி தைலம்

தோலில் ஏற்படும் வெண் புள்ளிகளுக்கும், அரிப்பு மற்றும் தோல் நோய்களுக்கு சிறந்தது.
அளவு : பாதித்த இடங்களில் தைலத்தை தேய்த்து விட்டு சூரிய ஒளியில் படும்படி சிறிது நேரம் வைக்கவும்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 500 மில்லிகளில்.

49 உளுந்து தைலம்

தலைநடுக்கம், கரங்கள் நடுக்கம் (கம்பம் நடுக்கம்) பலவித வாத நோய்கள், நடுக்கம், நரம்பு சம்பந்தான வியாதிகள்.
அளவு : வெளி உபயோகத்திற்கு மட்டும்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 500 மில்லிகளில்.

50 சந்தனாதி தைலம்

(ஆத்மரக்சாமிர்தம்)

ஆண்மைக்குறைவு, மலட்டுத்தன்மை, அரிப்பு, துர்நாற்றம், அதிக வியர்வை, தலைவலி, கண்காந்தல் நீங்கும்.
அளவு : வெளி உபயோகத்திற்கு மட்டும்
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

51 காயத்திருமேனி தைலம்

அடிபட்ட காயங்கள், வர்ம பிடிப்புகள்,சுளுக்கு, மண்டையடி, தசைவலி, முதலியவற்றிற்கு சிறந்தது.
அளவு : வெளி மற்றும் உள் உபயோகம் 5 முதல் 10 மில்லி தினமும் இரு வேளை மூன்று நாட்களுக்கு அருந்தலாம். உப்பில்லா பத்தியம்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

52 அரவிந்த் கற்பூரத் தைலம்

மூட்டு வலி, தலைவலி, உடல் வலி, நெஞ்சு வலி, கபசுரம்
அளவு : வெளி உபயோகம், தடவி ஒத்தடம் கொடுக்கலாம்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

53 ஹெர்பிண்ட தைலம்

அடிபட்ட இரத்தக்கட்டு, அடிபட்ட வீக்கம், நரம்பு வலி, எரிச்சல் முதலியவைகளுக்கு
அளவு : வெளி உபயோகம்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

54 ஏ. வி. டி. பால் தைலம்

(வெட்பாலை இலை தைலம்)

எல்லாவிதமான தோல் வியாதிகள், அரிப்பு, காலான் படை, படை பத்து
அளவு : வெளி உபயோகம்
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

55 வாதகேசரித் தைலம்

(தேரையர் தைல வர்க்கம்)

தீராத வாதரோகங்கள், ஏழு தாதுக்களில் கலந்த திமிர்வாதம், பாரிசவாயு, முடக்கு வாதம், மூட்டு வாதம், சூலைகட்டு ஆகியன. தசைபிடிப்பு, ஊமைகாயம் ஆகியனவும் தீரும்.
உபயோகம் : வெளி உபயோகத்திற்கு

56 கரப்பான் தைலம்

(தேரையர் தைல வர்க்கம்)

கரப்பான், சிரங்கு, படை, சொறி, கொப்பளம் ஆகியன.
அளவும் உபயோகமும் : 2-5 துளிகள் வரை காலையில் மட்டும் பாலுடன் உள்ளுக்குள் கொடுக்கவும். மேலுக்கும தடவலாம். கரப்பானுள்ள இடத்தில் மூன்று நாட்கள் வரை தைலத்தை தொடர்ந்து கோழியிறகால் தடவிவந்து, நான்காம் நாள் உசிலயிலை அரைத்து தேய்த்து இளவெந்நீரில் குளிக்கவும்.

57 சுக்கு தைலம்

(தேரையற் தைல வர்க்கம்)

1. உடம்பில் தேய்க்க ஆமவாதமும், ஆவர்த்த வாதமும் தீரும்.
2. நசியமிட தலைநோயும், பீனிசமும் தீரும்.
3. கொப்பளிக்க தந்தவாயுவும் (பல்வாயு) பல்லரனையும் தீரும்.
4. காதிலிட செவிக்குதல் தீரும்.
5. தினமும் தலையில் தேய்க்க தலைவலி, தலைநோய் தீரும்.

அளவு : வெளிப்பூசு மற்றும் தேய்த்துக் குளிக்கவும்.

58 சீரகத் தைலம்

(தேரையர் தைல வர்க்கம்)

பித்த மயக்கம், கண்நோய், வாந்தி, தலைவலி, மாந்தம், அள்ளுநோய் தீரும்.
உபயோகம் : வெளி உபயோகத்திற்கு தலைக்குத் தேய்த்துக் குளிக்கவும்.

59 ஆலம்பால் தைலம்

வர்மப் பிடிப்பு மற்றும் எல்லா வித எலும்பு முறிவுகளுக்கும், எலும்புகளின் பலத்திற்கும் சிறந்தது.
அளவு : வெளி உபயோகம்.
தயாரிப்பு அளவு : 100 மில்லி, 200 மில்லி மற்றும் 400 மில்லிகளில்.

60 சுகபேதி எண்ணெய்

(அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்)

நீர்க்கட்டு, வாய்வு வீக்கம், மூலச்சூடு, வாய்வு, பொருமல், பித்தம் முதலிய வியாதிகளை போக்கும். சுகபேதியாகும்.
அளவு : குழந்தைகளுக்கு 1 முதல் 5 மில்லி வரை பெரியவர்களுக்கு : 5 முதல் 10 மில்லி வெண்ணீருடன்.
தயாரிப்பு அளவு : 15 மில்லி, 30 மில்லி மற்றும் 60 மில்லி

61 அமுக்கராச் சூர்ணம்

(தேரையர் கரிசல் 300)

எட்டுவகைக் குன்மம், இடப்பாட்டு ஈரல்நோய், குத்துவாய்வு, மேகவெட்டை, வெள்ளை, வறட்சி, கைகால்எரிவு, கபம், இரைப்பு, இளைப்புச்சயம், விக்கல், பாண்டு, விந்து நஷ்டம் உடல் ஊட்டத்திற்கு சிறந்தது.
அளவும் அனுபானமும் : 1 முதல் 2 கிராம் தேன் அல்லது வெந்நீருடன் தினமும் இரண்டு வேளைகள்.

62 நிலாவாரைச் சூர்ணம்

(அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம்

வாயு, பொருமல், விம்மல், விக்கல், கபநோய், உடம்பெரிவு, மலமிளக்கி, இரைப்பிருமல், வாந்தி, மலக்கட்டு, பித்தம் முதலியன.

அளவும் அனுபானமும் : 1 முதல் 2 கிராம் வெந்நீருடன் இரவு ஒரு வேளை.

63 பஞ்ச தீபாக்கினி சூர்ணம்

(அகத்தியர் ரத்தினச் சுருக்கம்)

வாய்வு, பித்தம், கப நோய்கள், பசியின்மை, அஜீரணம், மயக்கம், பித்த கிறுகிறுப்பு, மூலவாய்வு, அஸ்திசுரம், வெட்டை, உஷ்ணம்.
அளவும் அனுபானமும் : 1 முதல் 2 கிராம் வரை 2 அல்லது 3 வேளைகள் நெய் அல்லது தேனுடன்

64 சீந்தில் சூர்ணம்

(அகத்தியர் வைத்திய காவியம் 1500)

மேகம், இருமல், இளைப்பு, கபம், விரைவாய்வு, வாதநோய், சயம், சர்ம நோய்கள், தலையில் மயிர் உதிர்தல், புழுவெட்டு பொடுகு நீங்கி கண்களுக்கு ஒளி உண்டாகும்.
அளவும் அனுபானமும் : 1 முதல் 2 கிராம் வரை நெய், தேன்,அல்லது சர்க்கரையுடன் சேர்த்து தினமும் இருவேளைகள்.

65 பறங்கிப்பட்டை சூர்ணம்

(சித்தவைத்திய திரட்டு)

மேகம், வெண் புள்ளிகள், கரும்புள்ளிகள், சொறி, சிரங்கு, படை, பத்து, கரப்பான் மற்றும் இரத்த சுத்திக்கு.
அளவும் அனுபானமும் : 1 முதல் 2 கிராம் வரை சர்க்கரையும் பாலும் சேர்த்து தினம் 2 வேளைகள்.

66 தாளிசாதி சூர்ணம்

(அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம்)

வாதம் 80, பித்தம் 40, கபநோய் 96, சர்ம நோய்கள், வயிற்று எரிவு, குன்மம், நீர் சுருக்கு, காமாலை, வெள்ளை, உள்வறட்சி, தாகம், இருமல், ஈரல் வறட்சி, மருந்தீடு, கபால வாயு, சூலை முதலியன.
அளவும் அனுபானமும் :
1 முதல் 2 கிராம் வரை தேனுடன் தினம் இருவேளைகள்

67 திரிபலாதி சூர்ணம்

வாய்ப்புண், வயிற்றுப்புண், மலச்சிக்கல், போக்கி உஷ்ணத்தைக் குறைக்கும். துணை மருந்தாக பயன்படும்.
அளவு : 5 கிராம் இரண்டு வேளைகள்.
தயாரிப்பு அளவு : 100 கிராம் மற்றும் 500 கிராம்.

68 அக்கினி சூர்ணம்

(ஆத்மரக்சாமிர்தம்)
அஜீரணம், மாந்தம், வயிற்று பொருமல், கிரானி தீரும்.
அளவு : 1/2 முதல் 1 ஸ்பூன் 2 அல்லது 3 வேளைகள்
தயாரிப்பு அளவு : 100 மற்றும் 500 கிராம்கள்.

69 திரிகடுகு சூர்ணம்

(அகஸ்தியர் பரிபூரணம் - 400)
நீரில் சாப்பிட மாந்தம், கழிச்சல் தீரும். தேனில் சாப்பிட சன்னி, சீதளமும் பனை வெல்லத்தில் சாப்பிட வயிற்று நோய் தீரும்.
அளவு : 1 முதல் 2 கிராம் வரை
தயாரிப்பு அளவு : 100 கிராம் மற்றும் 500 கிராம்

70 அஷ்ட சூர்ணம்

(அகத்தியர் வைத்திய காவியம் 1500)
அஜீரணம், பசியின்மை, ருசியின்மை, வயிற்றுவலி வாதகுன்மம், வயிற்று போக்குடன் கூடிய அஜீரணம்.
அளவு : 1 முதல் 3 கிராம் வரை நெய், மோர், தண்ணீருடன்.
தயாரிப்பு அளவு : 100 கிராம் மற்றும் 500 கிராம்.

71 ஏலாதி சூர்ணம்

(அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்)
வாதபித்தம், கிரந்தி, விரணம், குஷ்டம், பெரும்பாடு, எலும்புருக்கி.
அளவு : 1 முதல் 2 கிராம் தேனில்
தயாரிப்பு அளவு : 100 கிராம், 500 கிராம்.

72 கந்தக இரசாயனம்

(சித்த வைத்திய திரட்டு)
மேக நோய்கள், மேகநீர், வெள்ளை தோல் நோய்கள், குட்டம், வெண்குட்டம் முதலியன பூச்சிகடிக்கும் கொடுக்கலாம்.
அளவு : 6 முதல் 12 கிராம் வரை தினமும் இரண்டு வேளைகள்.

தயாரிப்பு அளவு : 125 கிராம், 250 கிராம் மற்றும் 500 கிராம்.

73 திப்பிலி இராசயணம்

